# திராவிடநாடு

25—9—60 | வார வெளியீடு | விலை 16 காசு


# ஆகுமோ?

[ பொன்னிவளவன் ]

சோலையில் பூங்குயில் பாடியென்ன?—மலர்
சுந்தரப் புன்னகை சிந்தியென்ன?

காலையில் செங்கதிர் தோன்றியென்ன?—வயற்
காடு வளம்பல தந்துமென்ன?

ஆலையின் சங்கொலி கேட்டுமென்ன?—நம்மை
ஆளும் வடக்கினர் கால்பிடிக்கும்

வேலையை நம்மவர் நீக்கும்வரை—நம்
வேதனை தீர்ந்திடப் போகிறதா?

தங்கம் நிலக்கரி தேனிரும்பு—வளம்
தந்திடக் காவிரி வற்றாஎண்ணெய்

பொங்கி யெழுங்கடல் தந்தமுத்து—பல
புத்தம் புதுப்பொருள் தென்னகத்தில்

எங்கு குவிந்து கிடந்துமென்ன?—அதை
ஏனென்று கேட்டிட நாதியில்லை!

மங்குத டாநம் வாழ்வனைத்தும்—நாம்
மான மிழந்தவர் ஆவதுவா?

# பாரதியாரின் சீர்திருத்தம்

—[தென்னவன்]—

நாடு உரிமை பெற்ற பின்னர் அரசியலில் இடைத்த உரிமை, ஏழை எளிய அன்புக் குடியினருக்குச் சமுகத்தில் கிடைக்கவில்லை. தேரின் அச்சாணி போலவும், மனித உருவின் கால்கள் போலவும், உண்ணும் உணவின் நன்நீர் போலவும் முக்கியமாகத் திகழும் அக்குடியினருக்கு—சமுதாயத்தில் எந்த அளவு முக்கிய இடம் கொடுக்கவேண்டுமோ அந்த முக்கிய இடத்தைக் கொடுக்கவில்லை. இந்த நிலையை மாற்ற அரசினரும் தீவிரமாக இன்னும் முனைந்தாரில்லை.

நாட்டின் நாலு பகுதியிலும் முற்போக்காளர் கூட்டம் பல்கிப் பெருகியுள்ள இன்றே இந்நிலை என்றால், நூறு ஆண்டுகட்குமுன், அந்த உழவர் குடியின் நிலை எப்படி இருந்திருக்கும் என்பது கூறாமலே விளங்கும். அன்றைய சமுகம் மதத்தின் கோரப் பிடியிலும், சாதியின் படுகுழியிலும், கேடு பயக்கக்கூடிய, அறிவுக்கு ஒவ்வாத பழக்க வழக்கங்களின் (சம்பிரதாயம்) உடும்புப் பிடியிலும் வீழ்ந்து கிடந்தது. "எல்லாம் அவனவன் விதி—முன் பிறப்பில் செய்த பாவம்"—என்ற, எத்தர்களின் ஏமாற்று வித்தைக்கு அடிமைப்பட்டுக் கிடந்த காலம்.

அப்போதுதான் தோன்றினார் தமிழகத்தில் பாரதியார். அந்தப் பொல்லாத காலத்தில்தான்—நாட்டிற்குக் கேடு பயக்கும் தீய சாதி—மத வேறுபாடுகளைத் துணிந்து கண்டித்தார். மாபெரும் சமுகமே அவரை எதிர்த்தது. அப்போதும் அவர் கலங்கினாரில்லை! அஞ்சா நெஞ்சுடன் சாதிக் கொடுமையைக் கண்டித்தார். சாதிகளை வாழவைக்கும் புராணக் குப்பைகளை இழித்துரைத்தார். சாதி வேறுபாடு காட்டுவோரைக் காரி உமிழ்ந்தார் — தனது புரட்சிப் பாடல்களின் மூலம்.

அவர் கூறிப்போந்த சீர்திருத்தக் கவிதைகளிற் சில, இதோ!

"பாதகஞ் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா—அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா"

—என்றும்,

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை
செய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை
செய்வோம்,
விழலுக்கு நீர்பாய்ச்சி மாயமாட்டோம்—
வெறும்
வீணருக்கு உழைத்துடலம்
ஓயமாட்டோம்."

"எல்லோரும் ஒன்றென்னும் காலம்
வந்ததே—பொய்யும்
ஏமாற்றும் தொலைகின்ற காலம்
வந்ததே!—இனி
நல்லோர் பெரியோரெனும் காலம்
வந்ததே! கெட்ட
நயவஞ்சகக் காரருக்கு நாசம் வந்ததே."

என்று தொழிலையும் தொழிலாளரையும் போற்றுவதுபோல், ஊரையும், தொழிலாளப் பெருமக்களை ஏய்த்துண்ணும் எத்தர்களையும் எச்சரிக்கின்றார். உழவுத் தொழிலாளியின் உரிமையை உரத்த குரலில் வலியுறுத்துகின்றார்—"வீணருக்கு உழைத்துப் போடாதீர்" என.

அதோடு விட்டாரா? இல்லை, இல்லை. இந்த நாட்டில் இருக்கும் சாதியை வேரோடு வெட்டி வீழ்த்த விரும்பினார். அதை ஓட ஓட விரட்டக் கருதினார். எனவே உள்ளக் கொதிப்போடும், உரிமைக் குரலோடும் சாதியைச் சாடுகின்றார்:

"சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாபம்,
சாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு
தன்னில் செழித்திடும் வையம்."

"பறையருக்கும் இங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை
பரவரோடு குறவருக்கும்
மறவருக்கும் விடுதலை"

"ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவனும் இல்லை சாதியில்
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தியாவில் இல்லையே."

என்று, அருமையாகவும், முற்போக்காளர் தம் உள்ளம் மகிழும் வண்ணமும் கூறிய அவர், சாதிப் பாகுபாடு பேசித் திரியும், சளக்கர் கட்குப் பாடம் கற்பிக்க எண்ணிய அவர், "காக்கையையும் குருவியையும், கடலையும், மலையையும் எங்கள் சாதி" என்று கூறுகின்றார்.

அப்பப்பா என்ன துணிவு! என்ன சீர்திருத்தம்! இந்த மாதிரி எண்ணற்கரிய துணிவில் ஒரு சிறு பகுதியையேனும் இன்று பாரதி விழாக் கொண்டாடுவோர் பெற்றிருந்தால் நாடு இதற்குள் வியத்தகு முன்னேற்றத்தைப் பெற்றிருக்கும்! கொண்டனரா? இனியேனும் கொள்ளுவரா அன்னவர்!

சாதியினை வாழவைக்க, உலுத்தர்கள் எழுதிவைத்த சட்டமாம் புராணங்களை வீரக்கவி இழித்துரைப்பதைப் பார்த்தால் நம் உள்ளமெல்லாம் குளிரும்:

"கடலினைத் தாவும் குரங்கும்—வெங்
கனலிற் பிறந்ததோர் செவ்விதழ்ப்
பெண்ணும்
வடமலை தாழ்ந்தத னாலே—தெற்கில்
வந்து சமன் செய்யும் குட்டை முனியும்
நதியி னுள்ளேமுழு கிப்போய்—அந்த
நாகர் உலகிலோர் பாம்பின் மகளை
விதியுற வேமணம் செய்த—திறல்
வீமனும் "கற்பனை"என்பது கண்டோம்"

(4-ம் பக்கம் பார்க்க)

# கண் திறக்குமா?

மலர் 19 ] ஆண்டுச் சந்தா ரூ. 8. (25—9—60) தனிப் பிரதி 16-காசு [ இதழ் 11

தமிழர்கள், பிழைப்புத்தேடி, தமிழகத்தைவிட்டு, வெளிநாடுகள் சென்று கூலிகளாகி வதைபடுவது, நாட்டுக்கும் ஆட்சிக்கும் இழுக்கு.

இந்த இழிநிலை, தமிழகத்தின் ஆட்சி முழு உரிமை பெற்றதாக அமையாதிருப்பதால் ஏற்படுகிறது.

இலங்கையில், புதிய அமுல் ஏற்பட்டதிலிருந்து, அந்தத் தீவிலே தமிழர் கூலிவேலை செய்திடச் சென்றிடுவதும் இயலாததாகிவிட்டது.

என்றாலும், பசியால் துரத்தப்பட்ட தமிழர், அனுமதி பெறாமலே, தோணிமூலம், இலங்கை செல்கின்றனர் — கனதனவான்கள் ஆக அல்ல—கள்ள மார்க்கட் நடத்த அல்ல—ஒரு கவளம் சோறு தேடி.

இவர்களைச் சிங்களத்தார், 'கள்ளத்தோணி' என்றுகூறி ஏளனம் செய்கின்றனர்.

இழிநிலையையும் பழிச் சொற்களையும் தாங்கிக்கொண்டாகிலும், பிழைக்கும் வழி தேடிக்கொண்டால் போதும், என்று துணியும் நிலைக்குத் தமிழர் துரத்தப்படுகின்றனர்.

அங்ஙனம் துரத்தப்பட்டுத், தோணி ஏறிச்சென்றவர்கள், பிணமாகிக், கடலோரம் ஒதுக்கித்தள்ளப்பட்டனர் என்ற செய்தி இரண்டு கிழமைகளுக்கு முன்பு வந்தது.

தமிழரின் நெஞ்சம் கொதித்தது!!

அது குறித்து, இலங்கை இதழ் 'சுதந்திரன்' வெளியிடும் கருத்தினைச் சுருக்கித் தந்திருக்கிறோம்.

மத்திய அரசுதான் இதுகுறித்துக் கவலைகாட்டவில்லை; சென்னை அரசேனும், அக்கரைகாட்டக் கூடாதா என்று 'சுதந்திரன்' கேட்டிருக்கிறது.

சென்னை அரசின் கண்திறக்கும் என்று இதழ் எதிர்பார்க்கிறது.

அரசு எதைச் செய்யுமோ, செய்யாதுபோகுமோ, என்பதுகூட ஒருபுறம் இருக்கட்டும், தி. மு. கழகம் தவிர, மற்ற மற்ற அரசியல் கட்சிகள்கூட அல்லவா; இது குறித்து அக்கரைகாட்ட மறுக்கின்றன.

சென்னை சட்டமன்றத்திலேயே இது குறித்து 'விவாதிக்க' அனுமதிகேட்டார், அன்பழகன். மறுக்கப்பட்டது!

•

"இலங்கையைப்போலவே இந்தியாவும் சுதந்திரம் பெற்ற நாடு. இலங்கையைவிட அளவால் பரந்த நாடு; வளமும், வனப்பும், மக்கள் தொகையும் மிகுந்த நாடு இந்தியா.

இந்தியா சுதந்திரமடைந்த பின் இரண்டு ஐந்தாண்டுப் பொருளாதார அபிவிருத்தி நிர்மாணத் திட்டங்களை இந்திய அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டுவந்து நாட்டின் செழிப்பையும் செல்வக் கொழிப்பையும் அதிகரிப்பதாகச் சொல்லப்படுகிறது. இதையே திரும்பத் திரும்பச் சொல்லித் தென் இந்திய காங்கிரஸ்வாதிகளும் பெருமைப்பட்டுக் கொள்ளுகிறார்கள்.

அப்படியிருந்தும் தென் இந்தியாவைப் பொறுத்த வரையில் வறுமைப்பேயின் கோரதாண்டவம் இன்னும் குறையவில்லையென்றே தோன்றுகிறது.

தென் இந்திய மக்கள்—பெரும்பாலும் தமிழ் மக்கள்—தங்கள் உயிரைக்கூடத் திரணமாக மதித்துக் கள்ளத் தோணிகளில் ஏறிக் காற்றிலும் கடலிலும் அலைந்து, இலங்கை நோக்கி வருவதேன்?

வட இந்தியர்கள் வயிற்றுப் பிழைப்புக்காக இப்படிக் கள்ளத்தோணி ஏறிக் கள்ளத்தனமாக எங்காவது குடியேறியதாகத் தெரியவில்லையே. அப்படியானால் 'தெற்குத் தேய்கிறது, வடக்கு வாழ்கிறது' என்று கூறப்படுவது உண்மைதானா?

ஈழத்தின் கரையோரத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்பு நிகழ்ந்த ஒரு கோரச் சம்பவம் நெஞ்சைப் பிழிகிறது. இந்தியாவில், குலசேகரன் பட்டணத்திலிருந்து 36 பேர் இலங்கை நோக்கிக் கள்ளத்தோணியில் புறப்பட்டு வந்திருக்கிறார்கள். அவர்களில் மூவர்தாம் உயிருடன் இலங்கைக் கரையை அடைந்திருக்கிறார்கள். மற்ற 33 பேரும் பரகதியடைந்துவிட்டார்கள்!

அவர்களை ஏற்றி வந்த இரண்டு ஏஜண்டுகள்—அல்ல, இயமகாதகர்கள்-இலங்கைக் கரைக்குச் சுமார் ஒரு மைல்

தூரத்தில் கழுத்தளவு கடல் நீரில் வைத்து, 'இனி நீங்கள் எல்லாரும் நடந்தே போகலாம்-கரை வந்துவிட்டது, இங்கு ஆழமில்லை' என்று கூறி, அவர்களை ஏமாற்றிப் படகி லிருந்து இறக்கிவிட்டிருக்கிறார்கள்.

சிறிது தூரம் அவர்கள் நடந்து சென்றதும் ஆழம் அதிகரித்திருக்கிறது. அவர்கள் தவித்து ஓடிப்போய்த் திரும்பவும் படகில் ஏற முற்பட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த ஈவிரக்கமற்ற கல்நெஞ்சர்களான ஏஜண்டுகள் அவர்களை ஏறவிடாமல் துடுப்பினால் தாக்கிப் பலங் கொண்ட மட்டும் உதைத்துத் தள்ளிவிட்டார்கள். அந்தோ, பரிதாபம்!

உயிருக்கு மன்றாடி அபயம் கேட்டவர்களை நடுக் கடலில் அப்படியே தத்தளிக்கவிட்டுவிட்டுப் படகோடு திரும்பிவிட்டார்கள் ஏஜண்டுகள். 36 பேரில் 3 பேர்தான் பிழைத்தார்கள். 18 பேர்களின் சடலங்கள் ஈழக்கரையை வந்து அடைந்தன. 15 பேர் போன இடமே தெரியவில்லை.

தமிழ் மக்கள் பெரும் கப்பலோட்டிகள் என்று சரித் திரப் புகழ் பெற்றவர்கள். அவர்கள் கலம் விட்டது பிறநாடுகளைப் போரில் வென்று வீர விருதும், வெற்றிக் கொடியும் நாட்டுவதற்காகவன்றி, வயிற்றுப் பிழைப்பை நாடிச் செல்வதற்காக அல்ல. அப்படிப்பட்ட தமிழ் மக்கள் கள்ளத் தோணிகளாக, இரப்பார்போல் ஈழம் நாடி வருவதுகண்டு ஈழத் தமிழ் மக்களே வருந்தவேண்டி யவர்களாயிருக்கிறார்கள். இந்த இழிநிலையைப் போக்கும் பணியில், இந்திய மத்திய அரசாங்கம்தான் பராமுகமா யிருந்தாலும், சென்னை அரசாங்கமாவது கண்திறந்து காரியமாற்றவேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்ளுகிறோம்."

•

இவ்வாறு இலங்கை ஏடாம் 'சுதந்திரன்' எழுதுகிறது. இங்குள்ள அரசோ, இது குறித்துச் சிறிதும் கவலை காட்டுவதாகவே தெரியவில்லை. ஏனோ தானோ என்ற போக்கில்—எத்தனை தமிழர்கள் எங் கெங்கு சென்று எப்படி எப்படி இறந்தால் எமக் கென்ன என்ற போக்கில் சென்னை அரசு, அதிலும் பச்சைத் தமிழர் ஆட்சி என்று பாராட்டுப் பெறும் காமராசர் அரசு நடந்துகொள்வது உண்மையிலேயே வேதனை தருவதாக மட்டுமல்ல—வெட்கப்பட்டுத் தலை குனியுமளவுக்கு நடந்து கொள்ளும் போக்கினை என்னென்பது! அந்தோ, தமிழ் மரபினரே, திராவிடத் தீரே இதுவா உங்கள் நிலை? இந்த இழி நிலை மாறவும், தமிழ் மக்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் களையவும் இங்குள்ள அரசு முன்வரவில்லை—துணிவு பெற வில்லை என்றால், இவர்களை நம்பி இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் இருந்தாலும், இவர்களால் ஆகப்போவதொன்றுமினி இல்லை என்ற முடிவுக்குத் தான் வரவேண்டியவர்களாகின்றோம்.

எனவே, நமது குறைகளை நாமே தீர்த்துக்கொள் ளும் ஒரே வழி—நம்மை நாமே ஆளும் வாய்ப்பினையும் பொறுப்பினையும் பெறுவதுதான். இந்த அரும் பெரும் பணியினைத் திராவிட முன்னேற்றக் கழகம் செய்து வருகின்றதென்பதனை இங்கு குறிப்பிட விரும்புகிறோம். இந்த நல்ல முயற்சிக்கு இடையூறு உண்டாக்கும் எவரும் தமிழர் நலன் கருதாதார் என்றே எண்ணப்படுவர் என்பதனையும் இங்கு எடுத் துக்காட்டி, இனியேனும் சென்னை அரசின் கண் திறக்குமா என்று எதிர்பார்க்கலாமா?

★

---

2-ம் பக்கத் தொடர்ச்சி

என்று மிகவும் துணிவோடு கூறி விட்டார். நாட்டில் தெய்வமெனக் கொண்டாடப்படும் புராணங்கள் எல்லாம் நம் பாரதிக்குக் கற்பனைப் புரட்டுகளாகத் தெரிகின்றன. இவ் வாறு துணிவுடன் கூறிய அவரை விழாக் கொண்டாடுவோர், கண் டிக்கவில்லை. ஆனால் அதே கருத் தைக் கூறும் சிந்தனையாளர்களைத் திட்டுகின்றனர்! விந்தையல்லவா!

இவ்வாறு சாதியையும் புராணத் தையும் கண்டித்த அவர், இனி இந்த நாட்டிலே எவ்வகை வேறு பாடும் நிலைக்கக்கூடாது. எல்லோ ரும் ஒன்று என்ற உண்மை நிலை வளரவேண்டும் என்று கருதி,

"திறமை கொண்ட தீமையற்ற
தொழில்புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞான மெய்தி
வாழ்வ மிந்த நாட்டிலே."

"எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓரினம்,
எல்லாரும் ஓர்நிறை; எல்லாரும் ஓர்விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்!!"

என்று தீயோர் திருந்துமாறு ஆணையிடுகின்றார். மனிதனாய்ப் பிறந்து அந்தப் பண்பை மறந்து வாழும் கடையர்கட்குக் கட்டளை இடுகின்றார். ஆனால் அதேபோது அந்த ஏழையர்கட்கு உரிமைப் பட்டயமும் வழங்குகின்றார் மேற் காட்டிய கவிதைகளின்மூலம். ஆம்!

அவர் புரட்சித் தலைவர் அல்லவா!
சிறந்த சீர்திருத்தவாதியல்லவா!

அப்படிப்பட்ட சீர்திருத்தவாதி யாம் பாரதியாரின் பொன்மொழி கள் கடைபிடிக்கப்பட்டு நடை முறைக்குக் கொண்டுவரப்படுகின்ற னவா என்று எண்ணிபபார்த்தால், அவருடைய பெயரை வைத்து விழாக்கள் கொண்டாடப்படுகின்ற னவேயன்றி, அவருடைய கருத் துக்கள் எல்லாம் காற்றில் பறக்க விடப்படுகின்றன என்ற முடிவுக் குத்தான் வரவேண்டியிருக்கிறது.

பாரதியாரின் பெயரால் விழாக் கொண்டாடுபவர்கள் இதனைநன்கு எண்ணிப்பார்த்தல் வேண்டும்.

●



காஞ்சீபுரம்

23-9-60.

தம்பி!

“ஞோஞா”—உச்சரிக்கத் தெரிகிறதா—முடிகிறதா! வேடிக்கையாக இருக்கிற தல்லவா, 'ஞோஞா' என்று கூறும்போது. உனக்கு உச்சரிக்கக் கஷ்டமாக இருக்கக் கூடும். எனக்கு, 'ஞோஞா' என்று கூற; வசதியாக இருக்கிறது—ஒரு இழுமையாகக்கூட, எனக்கு நாசியில் அடைப்பு, தொண்டையில் சளி, இலேசாகக் காய்ச்சல்—இந்த நிலை 'ஞோஞா' என்று கூறக், கன கச்சிதமாக இருக்கிறது!!

அதுசரி, அண்ணா! இருகிழமைகளாக என்னோடு உரையாடாமலிருந்தது, சீன மொழி கற்கத்தானா, என்று கேட்கிறாயா, தம்பி! தவறு, தவறு, மிகத் தவறு! ஞோஞா, சீனமொழி அல்ல; மலாய் மொழி.

ஆமாம், இனி, மலாயா வானொலியில், அடிக்கடி, இந்த 'ஞோஞா' எனும் சொல் கூறப்படுவதைக் கேட்கலாம்.

மணமாகாதவளைக் குமாரி அல்லது மிஸ்—என்றுதான் மலாய் வானொலி, கூறிக்கொண்டு வந்தது—குமாரி, தமிழ்ச் சொல்—மிஸ் ஆங்கிலம். மலாய் நாட்டிலே, தமிழோ ஆங்கிலமோதானா, இருக்கவேண்டும்? மலாய் மொழியை ஏன் புறக்கணிக்கவேண்டும்? மலாய்மொழி, புறக்கணிக்கப்பட்டால், பின்னர், மலாய் நாடு என்ற தனிநிலை பெற்றதனால் பயன் என்ன? தாய்மொழியில் தக்க சொல் இடைக்கும்போது, எதற்காக வேற்று மொழிகளைச் சுமந்துகொண்டிருக்க வேண்டும்? நாட்டுப்பற்று வளர, வழிகோலவேண்டுமெனின், முதலில் மொழிப்பற்றன்றோ தேவை! அங்ஙனமிருக்க, குமாரி என்றும், மிஸ் என்றும வானொலியில் அறிவிக்கலாமோ? வானொலி இனி, மணமாகாத பெண்களைக் குறிப்பிடுகையில் 'ஞோஞா' என்றுதான் கூறவேண்டும் என்று, மலாய் நாட்டுத் துரைத்தனம் அறிவித்துவிட்டது!

துவான் ஹாஜி ஸைனுல் ஆபிதீன் என்பவர் தலைமையில் அமைக்கப்பட்ட, ஒரு குழு மலாய் மொழியிலே காணக்கிடக்கும் சொற்களை ஆய்ந்தெடுத்துப் பழக்கத்துக்குக் கொண்டுவர, வழி அமைத்திருக்கிறது. அதன் விளைவாகவே இனி ஞோஞா, என்று மலாய் வானொலி ஒலிபரப்ப இருக்கிறது.

பெயரில் என்ன இருக்கிறது!—என்று பேசிடும் பெருந்தன்மையாளர் இங்கு உளர்! அவர்கட்கு 'ஸ்ரீ'—என்றால் இனிக்கும், 'திரு'—என்றால் தித்திக்காது! 'ஆகாஷ் வாணி' என்று கூறி அகமகிழ்வர், வானொலி என்று கூறினால், வாய் வெந்துவிடும் என்று கருதுகின்றனர். தமிழ் மொழியாம 'திரு' இருக்க, ஏனோ வடமொழியில் ஸ்ரீ என்று கூறுகிறீர்கள்—இனி, 'திரு' என்ற அடைமொழியையே, கூறிடுவீர் என்று

## 'ஞோஞா'

சென்னை மாநகராட்சி மன்றம் செப்பிற்று; காஞ்சிபுரம் நகராட்சி மன்றமும் கூறிற்று; பல நகராட்சிகள், ஊராட்சிமன்றங்கள் தீர்மானம் நிறைவேற்றிச், சென்னை அரசுக்கு அனுப்பிவைத்துள்ளன. அரசோ, எப்படிச் சொன்னால் என்ன, 'ஸ்ரீ' இருந்துவிட்டுப் போகட்டுமே, ஏன் அதை மாற்றவேண்டும்? என்று வாதாடுகிறது. விரிந்த பரந்த மனப்பான்மைக்கு இஃதே சான்று என்று சென்னை அரசு கூறுகிறது—தன்னைத்தானே தட்டிக் கொடுத்துக்கொள்கிறது. மலாயாவிலே, தம்பி! துங்கு ரஹிமான், மலாய் மொழி, மலாய் இனம், மலாய் நாடு, எனும் உணர்ச்சி ஏற்பட்டாகவேண்டும், அப்போதுதான், மலாய், தனி அரசு நடாத்துவதிலே பொருளும் உண்டு, பயனும் ஏற்படும், சுவையும் கிடைக்கும் என்று கருதுகிறார் — அந்தக் கருத்துக்கேற்பக் காரியமாற்றுகிறார்,

**ஆடவர்களை, இஞ்சே என்றும், பெண்களை, சே என்றும், மணமாகாத பெண்களை ஞோஞா என்றும், மணமானவனை புவான் என்றும், மலாயா வானொலி அறிவிக்கும்.**

குறுகிய மனப்பான்மை—கோணல் வழி—மொழி வெறி—என்றெல்லாம் இங்கு, தூய தமிழ்வேண்டும் என்று உரைப்போரை, ஊராள்வோர் ஏசுகின்றனர். மலாயாவில், துரைத்தனமே மலாய் மொழிதான் நாட்டுமொழி, பிறமொழிக் கலப்பும் பிற இனத் தொடர்பும், பிற பண்பாடு குழைந்துவிடுவதும், நன்றன்று, என்று துணிந்து கூறுகிறது; கருத்து வெற்றிபெறக் காரியமாற்றவும் செய்கிறது.

இத்தனைக்கும், தம்பி! மலாயாவே, பல்வேறு காலங்களிலே பல்வேறு நாட்டு மக்கள் சென்று தங்கி, ஒரு 'கலப்படம்' ஏற்பட்டுப்போயிருக்கும் நாடு. அங்கேகூட, ஓர் இனம், ஓர்மொழி, உண்டு என்ற உணர்வும், அதனை அரசோச்சச் செய்திடல் வேண்டும் என்ற ஆர்வமும், எழக் காண்கிறோம். இங்கோ, பிறமொழிகளைச் சுமந்துகொண்டு திரிந்திடுவோரையன்றோ காண்கிறோம். அந்தக்கொடுமை போதாதென்று, அப்பேரறிவாளர், தமிழின் தூய்மைக்காகப் பாடுபடுவோரை, எள்ளிநகையாடவும் செய்கின்றனர். மேலிடம் உள்ளோர், தம்மைக் குட்டி உட்காரவைப்பரோ, அல்லது பதவியினின்றும் உருட்டிக் கீழே தள்ளிவிடுவரோ, என்ற அச்சம், குடிகொண்டவர்கள், ஆளவந்தார்களாகியுள்ளனர்.

**"இந்தி மொழியில் இருபெரும்காப்பியங்கள், உள்ளன— ஒன்று துளசிதாசின் இராமாயணம்........."** என்று தம்பி! நான் இம்முறை சட்டமன்றத்தில் பேசியபோது, பலர், இரண்டு காவியம் என்றுரைக்கிறானே, துளசிதாஸ் இராமாயணம் ஒன்றுதானே காவியம், மற்றொன்று எது? என்று எண்ணிக்கிடந்தனர்; நான் என் பேச்சைத் தொடர்ந்து,

**மற்றோர் காவியம் அகில இந்திய இரயில்வே கைட்—** என்று கூறினேன். சிலரால், சிரிப்பை அடக்கவே முடியவில்லை. அமைச்சரும் மகிழ்ச்சி பொங்கி வழிந்திடும் நிலையில்தான் இருந்தார்—எனினும் கடமை அவரைக் குடைந்தது, எழுந்தார், குறுக்கிட்டார், நமது மொழிபற்றி எவ்வளவு பெருமையாக வேண்டுமானாலும் பேசிக் கொள்ளலாம், ஆனால் பிற மொழியை இப்படி இகழத் தேவை இல்லை என்றுரைத்தார். எனக்கு அவருடைய நிலை புரிந்தது, அதனையும் அங்கேயே கூறினேன்,

> **இந்தி மொழியைப்பற்றி ஒருவன் ஏளனம் பேசக் கேட்டும், சும்மாவா இருந்தீர்? என்று மேலிடத்தார் கேட்டால், 'இல்லையே, உடனே எழுந்து, அதனைத் தடுத்து நிறுத்தினேனே'! என்று மேலிடத்தாருக்குச் சொல்லிக்கொள்ளத்தான் இப்போது அமைச்சர் குறுக்கிட்டுப் பேசினார்**

என்று நான் கூறினேன்—அமைச்சர், இருக்கை நாடினார்! தம்பி! நமது அமைச்சர்கள், தமிழர், தமிழகம், தமிழ்மொழி, தமிழர் நெறி, என்று கூறவும் அஞ்சுகின்றனர்—அடிமைத்தனம் அவர்களைத் தடித்த தோலர்களாக்கிவிட்டிருக்கிறது,—பதவிப்பற்று, அவர்களைப் பல்லிளிக்க வைக்கிறது—தமிழகத்தைச் சென்னை என்றே செப்புகின்றனர்—பாரதி விழாவின் போதோ, செந்தமிழ் நாடென்னும் போதினிலே, இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே-என்று பாடிவிடுகிறார்கள். மலாயாவிலே மேற்கொள்ளப்பட்டு வரும், முயற்சியினைக் கண்டேனும், இவர்தம் கருத்துத் தெளியுமா? துணிவு ஏற்படுமா? என்று கேட்கத் தோன்றுகிறது.

போகட்டும், தம்பி! கறந்த பால் காம்பேறாது, கருத்தழிந்தோர் துணிவினைப் பெறார்—என்று எண்ணிக்கொள்வோம். மலாய் நாடு தேடித் தேடிப் பார்த்து, கல்லி எடுத்து, குமாரிக்குப் பதில் ஞோ ஞா என்ற சொல்லினை வானொலி மூலம் ஒலி பரப்புவது கேட்கும்போது, நாம், தமிழ் மொழிக்கு ஏற்றம் கிடைத்திட வேண்டும், ஒரு துளியும் தேவையற்ற நிலையில், தமிழில் பிற மொழிச் சொற்களைக் கொண்டு வந்து கலக்கிவிடுவது தீது, எனவே அஃது நீக்கப்பட்டாகவேண்டும், என்று கொண்டுள்ள கொள்கை, அப்பழுக்கற்றது, என்பது உறுதிப்படுகிறதல்லவா? ஆளத் தெரியாதார், அந்த வாய்ப்புக் கிடைக்கப்பெறாதார், வீணான பகைமையுணர்ச்சியை மூட்டிவிடவே, 'திரு' என்றும், 'வானொலி' என்றும் செப்பித் திரிகின்றனர் என்று கூவிக்கிடந்திடும், குணாளர்கள் தலையிலே ஓங்கிக் குட்டுவது போலன்றோ, மலாய் துரைத்தனம் ஞோ ஞா கூறுகிறது!!

மிகக் கோடியிலிருக்கிற க்யூபா நாட்டிலிருந்து அண்டையிலே, உள்ள மலாயா வரையிலே, **தாய்மொழி, தாயகம்! தனி அரசு** எனும் உணர்ச்சி கொழுந்துவிட்டு எரிந்திடக் காண்கிறோம்; காண்பதனால், நாம், கொண்டுள்ள கருத்து, வலிவுடையது என்பது மட்டுமல்ல, உரிமைக்குப் போரிடும் அறிவாற்றல் கொண்டோர்

எவரும் போற்றத்தக்கது, என்பது, உறுதிப்படுகிறது.

மொழியில் என்ன இருக்கிறது என்று பேசுவோர், தமது மொழிமூலம் ஆதிக்கத்துக்காக வழி வகுத்துக்கொண்டுள்ள சூது வெளிப்பட்டுவிடும் என்ற அச்சத்தினாலேயே அவ்விதம் பேசுகின்றனர்.

அசாமில் அசாம்மொழி ஆட்சிமொழி ஆவதை, அந்த மாநிலத்திலே பெரும் அளவு குடியேறி உள்ளவர்கள், பல்வேறு துறைகளிலே இடம் பிடித்துக்கொண்டு 'கொட்டமடிப்போர் எதிர்த்துக் கிளர்ச்சி நடத்தினர். குத்தும் வெட்டும், கொலையும் கொள்ளையும், சூறையாடலும் கற்பழித்தலும் ஆகிய கொடுமைகள் நடைபெற்றன — கண்டனங்கள், அறிவுரைகள், கிளம்பின; குழுக்கள் அமைக்கப்பட்டன; ஆய்வுரைகள் வெளியிடப்பட்டன; எனினும் புகை கிளம்பியபடியே இருக்கிறது.

மொழி பற்றியா இப்படி ஒரு அமளி! ஏனோ இந்த வெறி! எதற்கோ இந்த அறிவீனம்!—என்று பெருந்தலைவர்கள், கொடுமைகளுக்கு நெடுந்தொலைவிலே இருந்துகொண்டு பேசுகின்றனர். ஆனால், அமளியில் சிக்கினோரோ, அடிமைகளாக, நடைப்பிணங்களாக உழலுவதைவிட, ஒரு கணம் உரிமை முழக்கம் செய்துவிட்டேனும், மடிந்துபடுவோம். எற்றுக்கு இந்தப் பிச்சைப் பிழைப்பு! நாம் பிறந்த நாட்டிலேயே நாம் மற்றவர்களை நத்திப் பிழைத்துக்கிடக்கத்தான் வேண்டுமா! — நமது தொழிலிடங்களில் வேற்றார் ஆதிக்கம் செலுத்துகின்றனர், நாமோ மாற்றானால் சிறைபிடிக்கப்பட்டவன் கொத்தடிமையாகிக் கிடப்பதுபோலக் கூலிகளாகிக் குமுறிக்கிடக்கிறோம். மனதை மயக்கும் இயற்கை வளம், நமக்கு வயிறாரச் சோறளிக்கவும் இல்லை—வேற்றாரோ அதனைச் சுறண்டிக் கொழுக்கிறார்கள்! ஏன் என்று கேட்கவோ, 'பெரியவர்கள்' கூசுகின்றனர்—கொடுமைகளால் அவர்கள் தாக்கப்படாததால். நாமும், அவர்போல் இருந்துவிட்டால், நமதுகதி யாது ஆகும்? நாம் வாழ வழி வகுக்காத, நாடு ஒன்று நமக்கென்று இருப்பதைக் காட்டிலும், நாம் நாடற்றவர் ஆகிவிடுவதும் நன்று—இல்லையேல் உயிரற்றவர் ஆவது மிகநன்று!—என்று எண்ணி எண்ணிக் குமுறிக்கிடந்தனர், மக்கள்—வெடிமருந்துக் கிடங்கிலே சிறு பொறி வீழ்ந்ததுபோல, மொழிபற்றிய தகராறு கிளம்பிற்று, நெடுங்காலமாக மூண்டுகிடந்த பகை பீறிட்டுக் கிளம்பிற்று—பாரத நாடு—இந்திய மக்கள்—எனும் சொற்கள் பொருளற்றன, சுவையற்றன, வலிவற்றன என்பது விளங்கிற்று — அசாம் அசாமியருக்கே என்ற முழக்கம், நாட்டையே கிடுகிடுக்கவைத்தது; அசாம் அரசு, வழி தவறிச் சென்றதென வங்க அரசும், வங்க அரசு வரம்பு மீறி நடக்கிறது என்று அசாம் அரசும் வசைபாடிக் கொண்டதுடன், இரு அரசுகளும், டில்லிப் பேரரசு கடமையைச் சரிவரச் செய்யவில்லை என்று கண்டனம் தெரிவித்தன. எவர் உண்மையில் குற்றம் புரிந்தனர், எவர் உள்ளபடி அத்துமீறிய செயல்புரிந்தனர், என்பது, தம்பி! கண்டுபிடிக்கப்படவேண்டும் என்ற நோக்கத்துடன், எந்தக்குழு இனிப் பணியாற்றினாலும் கசப்பு வளருமே தவிரக், குறையாது.

வங்கத்தவரும் அசாமியரும்—இருசாராருமே—தவறுகளை உணர்ந்துவிட்டனர் — ஏற்பட்டுவிட்ட தவறுகளுக்காக வருந்துகின்றனர் — வெட்கப்படுகின்றனர் —இனி ஒரு தாய்வயிற்று மக்கள்போல வாழ உறுதி கொண்டுவிட்டனர், என்று அறிவிக்கப்படுகிறது.

இதிலே, தம்பி! ஆபத்தை எந்த நேரத்திலும் கக்கக்கூடிய, சொற்றொடர்கள் இருப்பதனைக் கவனித்தாயா—இருசாராரும்! மிக ஆபத்தான சொற்றொடர்!!—ஒரு தாய்வயிற்று மக்கள் **போல**!!—சுவை பூசப்பட்டிருக்கிறது, எனினும் ஆபத்துத் தொக்கிநிற்கிறதல்லவா, "**போல**" என்ற சொல்லில்!!

ஒரு தாய்வயிற்று மக்களேகூட ஒருவரை ஒருவர் தாக்கிக்கொள்வதுண்டு பகையுணர்ச்சி ஏற்பட்டு—வெட்டி வீழ்த்திக்கொள்வதுண்டு 'வெறி முற்றி — எனினும் இறுதியில் ஒரு தாய்வயிற்று மக்கள் என்ற உண்மை வெற்றிபெறும். ஆனால் ஒரு தாய்வயிற்று மக்கள் **போல** என்று மட்டும்தானே, பேசமுடிகிறது. அசாமியருக்கும் வங்காளிகளுக்கும் இடையே மூண்டுவிட்ட பகையைப்போக்கும் நோக்குடன் பாகுமொழி பேசிப், பண்பினைப் போதித்துச், சமரசம் காண விழைவோரால்!

ஆமாம், இனி நாம் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளக்கூடாது — நாமென்ன நற்பண்புகளறியாக் காட்டுக்குணமுடையோரா!—வெள்ளையருக்கும் கருப்பருக்கும் இடையே உள்ளதுபோன்ற 'நிறபேதம்' நம்மிடம் இல்லையே! மும்மூர்த்திகளை இருவரும் வழிபடுகிறோம் — புனிதக் 'கங்கையிலே பாபம் போக்கிக் கொள்ள இருவருமே மூழ்கி மகிழ்கிறோம் — இமயத்தின் பனிப்படலம் காண இருவரின் நெஞ்சிலேயும் ஒரு எழுச்சி ஏற்படத்தானே செய்கிறது — அன்னை பாரதமாதாவின் அருமருந்தன்ன மக்களன்றோ இருவரும் — என்றெல்லாம், பேசிடும்போதும், நேசம் காட்டி மகிழ்ந்திடும்போதும், இருசாராருமே, வேறோர் கருத்தினை உள்ளூரப் பற்றிக்கொண்டுள்ளனர் — தம்பி! அவர்கள் பற்றிக்கொண்டுள்ளனர் என்று கூறுவதைவிட, அந்தக் கருத்து அவர்களைப் பற்றிக் கொண்டிருக்கிறது என்று கூறுவதே முற்றிலும் பொருத்தமானதாகும். அந்த உள் உணர்ச்சி, மெள்ள மெள்ள, வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் தலை தூக்கும் — மறுப்பு எழும்போது வேகமாக வெளிப்படும் — எதிர்ப்புக்காட்டப்படும்போது கொதித்து எழும்! அந்த உள்உணர்ச்சி, ஆனால் என்ற முன்னுரையுடன் தொடங்கி, ஆகவே என்ற சொல்லினைநாடிப் பெறும். பிறகோ, குத்தும் வெட்டும், கொலையும்

பிறவும் தலைவிரித்தாடும், நட்பு நாசமாகும், பகை கொக்கரிக்கும்.

இதோ ஒரு அசாமியன், தம்பி! நடைபெற்ற நாச காரியத்துக்காக இன்று வெட்கப்படுகிறான் — இனி வங்க மக்களுடன் ஒருதாய் வயிற்று மக்கள்போல வாழச் சம்மதம் தெரிவிக்கிறான் — அவனே எந்தக் குடிலுக்குத் தீ மூட்டிவிட்டானோ, அதே குடிலைத் திரும்பக் கட்டித்தர முன்வருகிறான் — அவனைப் பாராட்டிவிட்டு, "ஏனப்பா, இத்துணை நல்லவனாக இருக்கிறாயே! வங்காளியானால் என்ன, அசாமியன் ஆனால் என்ன, அனைவரும் பாரத மக்களன்றோ என்று கீதம்பாடுகிறாயே, இப்படிப்பட்ட பண்பாளனாகிய, நீயா, வெறிச் செயலில் ஈடுபட்டாய், வங்காள மாதர்களைக்கூடத் துன்புறுத்த மட்டுமல்ல, மான பங்கப்படுத்தக்கூடத் துணிந்தனை! ஏன் ஏற்பட்டது, ஈனத்தனமான எண்ணம்! எவர் மூட்டிவிட்டனர், உன் இதயத்திலே, இத்தகைய இழிகுணத்தை! — என்று கேட்டிடின், அவன் முதலில், "வீணாக ஏன் பழைய நிகழ்ச்சியைக் கிளறுகிறீர்கள்? வேண்டாம்! புதுக்காலம் பிறந்துவிட்டது! பொற்காலமாக்குவோம் இதனை! பகை மடிந்தது! பண்பு மலர்ந்தது! பாரதம் வென்றது!!" என்று கூறுவான், தம்பி! உண்மையினைக் காணவேண்டி, நீ அவனை மேலும் உசாவினால், சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, மெல்லிய குரலிலே பேசுவான், "பகை கூடாது, நண்பனே! நிச்சயம் கூடாது! மனிதத் தன்மை புனிதமானது, மறந்தேனில்லை. ஆனால்.........இதைக் கேள். இது அசாம்! என் தாயகம்! இங்கு எனக்கு வாழ வழி இல்லை!! கூலிவேலை செய்தாலன்றி!! அதோ பார் அலுவலகங்களை—வட்டிக் கடைகளில் வங்காளியர்! தபால் நிலையங்களில் வங்காளியர்! வணிகக் கோட்டங்களில் வங்காளியர்! புகைவண்டி நிலையங்களிலே வங்காளியர்! எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையில் வங்காளியர்! எங்கும் அவர்கள்! எதிலும் அவர்கள்! ஏற்றமெல்லாம் அவர்கட்கு!! எமக்கு உள்ளது என்ன? கல் உடைக்க நாங்கள், கனவானாக அவர்கள்! மண் சுமக்க அசாமியர், மண்டிக் கடை நடாத்த வங்காளியர்! ஏடு நடாத்த அவர்கள், எடுத்துச்சென்று கூவிக் கூவி விற்க நாங்கள்! இதற்கு, எமக்கு அசாமியர் என்ற பெயர் எதற்கு! இந்த நாட்டுக்கு அசாம் என்ற தனிப்பெயர் இருப்பானேன்! வங்கத்தவர், இங்கு பையப்பையப் புகுந்து இத்துணை ஆதிக்கம் பெற்ற பிறகு, வங்கத்தின் கொல்லையாக்கிக் கொள்வது தானே, ஏன் அசாம் ஓர் தனி மாநிலம் என்று கூறிட வேண்டும்! அசாமியன் வாழ வழி இல்லை; அசாம் என்ற பெயர் எதற்கு!!—என்று கூறிக் குமுறுகிறான்; கண்களிலே வெறி உணர்ச்சி காணப்படுகிறது! கவனித்தாயா!!

இந்த உள் உணர்ச்சியை ஓராயிரம் தலைவர்கள், உன்னதமான உபதேசம் அளித்தும் நீக்கிட இயலவில்லை—நீக்கிட இயலாது! ஒன்று, அவன் தன் உரிமை எவராலும் பறிக்கப்படவில்லை என்று உணர வேண்டும்—அல்லது அவனுக்கு உரிமை உணர்ச்சி அறவே அற்றுப் போய்விடவேண்டும்—அந்த அளவு அவன் தடித்த தோலனாகிவிடவேண்டும். தம்பி பத்துப்பேர் பதினைந்துபேர், மாதம் ஆயிரம் இரண்டாயிரம் கைக்கூலி பெற்றுக்கொண்டு, 'தடித்த தோலராகி'—அது வெளியே தெரிய ஒட்டாதபடி, பதவிப் பட்டாடை அணிந்துகொண்டு, மந்திரிகளாகிவிடலாம்! ஒரு இனமக்கள் கூட்டம் முழுவதுமா, அங்ஙனம் நிலை கெட்டுப் போய்விட முடியும்! முடியாதே! அங்ஙனமாவது இயலாததொன்று என்பதனால்தான், வீரம் தீரம் தியாகம் எனும் எழுச்சியூட்டும் இயல்புகளை உள்ளடக்கிய விடுதலைப் போர்க் காதைகளாம் வீரக் காப்பியங்கள், உலக மன்றத்திலே, என்றோ நாளல்ல, புதிது புதிதாக இயற்றப்பட்டு வருகின்றன! குமுறிக் கிடக்கும் மக்கள், கைகூப்பி நிற்கும் மக்கள், கண் கசக்கி நிற்கும் கதியற்ற மக்கள், ஓர்நாள் கொதித்தெழுந்து கிளம்புகின்றனர், அச்சம் அழிந்துபடுகிறது, ஆண்மை தலைமை ஏற்கிறது, ஆணவக் கோட்டைகள் தூள் தூளாகின்றன! விடுதலை முரசொலி எங்கும் எழுகின்றது!! என் நாடு! என் அரசு! என் மொழி! என் இனம்!!—என்று எக்காளம் எழுகிறது, மனித குலத்தின் ஓர் பகுதியினர், தளைகளை நொறுக்கி எறிந்துவிட்டுத், தன்னாட்சி பெற்றுத், தலை நிமிர்ந்து நடக்கின்றனர்.

காலில் தட்டுப்படும் வைரத்தைக், கற்களிலே ஒரு வகை என்று எண்ணிக் கொள்கிறான், கருத்தறியாதான், கருப்பன்! யானைத் தந்தத்தை அடிப்பிலிடுகிறான், அதன் மதிப்பறியாமல்! கூவுகிறான், அது இசையாம்! கூத்தடிக்கிறான், அது நடனமாம்! சொல்லுகிறான், அது வேள்வியாம்! செச்சே! ஆண்டவன் படைப்பிலே, இப்படி ஒரு காட்டு மிராண்டிக் கூட்டமா!!—என்று வெள்ளையர், கேலி பேசினரே, தம்பி! கருப்பர் எனும் நீக்ரோ இனமக்களை. காணகிறாயல்லவா, இன்று அவர்தம், வீரச் செயல்களை, விடுதலைப் போரினை, வெற்றிக் காதையினை!!

காமரூன்
டோகோ
சோமாலியா
காங்கோ
டாஹோமி
நைஜர்
மேல்வோல்டா
ஐவரிகோஸ்ட்
சாட்
கேபன்
மத்திய ஆப்பிரிக்கா
சைப்ரஸ்

தம்பி! 14 புதிய நாடுகள்—விடுதலை பெற்ற வீரபுரிகள்—தனிக்கொடியினைப் பறக்கவிடும் குடி அரசுகள்—

இதோ இப்போது ஐக்கிய நாடுகள் மன்றத்திலே, உறுப்பினர்களாகிவிட்டன. சோவியத் தலைவர் குருசேவ், கைதட்டி, வரவேற்றாராம், இது அறிவிக்கப்பட்டபோது. காலம் இப்படியும் ஆகிவிட்டதே என்றெண்ணிச் சில ஆதிக்க அரசுகள், கைபிசைந்து கொள்ளக்கூடும் — எனினும் படையும் தடையும், வேட்டும் வேதனையும், கொலையும் கொடுமையும், விடுதலை உணர்ச்சியை, உரிமை உணர்ச்சியை அழித்திட முடியவில்லை, இறுதி வெற்றி எழுச்சி பெற்றோருக்கே, என்பதையன்றோ, இந்தக் குடி அரசுகள், எடுத்துக் காட்டுகின்றன!

"எம்மைப் பாரீர்! அடிமைத்தளைபூண்டு அழுது கிடந்திடும் மக்காள்! பாரீர் எம்மை! எமது கரங்களிலும் தளைகள் பூட்டப்பட்டிருந்தன—தசையை அழுத்தும் அளவுக்கு! சாட்டையடி பட்டோம்! பசியாலும் தாக்குண்டோம்! பல்லிளிக்காவிட்டால், பாதம் பிடித்திட மறுத்தால் பயங்கரமான கொடுமைகள் ஏற்படும்! கரும்பு விளைவிப்போம், சுவை காணமாட்டோம்! வெட்டி எடுப்போம் தங்கம், அவர்கள்முன் கொட்டிக் காட்டி மகிழ்விக்க! உழுது அழுவோம், அவர்கள் அறுவடை கண்டு மகிழ்வர்! அவர்கள் மருத்துவமனை அமைப்பர், நாங்கள் நோயாளிகளை அனுப்பி வைப்போம். அவர்கள் குதிரை வளர்ப்பர், நாங்கள் மேய்ப்போம் தேய்ப்போம்! அவர்களின் நாய்கள், எமது குழந்தைகளைக் கடித்துவிடும், நாங்கள் எமது குழந்தைகளை அடித்து அடக்கமாக்கவேண்டும்! அவர்கள் படித்து மகிழ்வர், நாங்கள் வாய்பிளந்து நிற்போம்! செடியும் கொடியும், கல்லும் மண்ணும், எலும்பும் எரிபொருளும், இவைதாமே, உமக்குத் தெய்வங்கள், என்று கேட்டுக் கேலி செய்வர், நாங்கள் ஆம்! ஆம்! என்று தலை அசைத்து நிற்போம். ஆடு! என்பர், ஆடுவோம்!! அவள்? என்று கேட்பர், மகளாயினும் மாதாவாயினும், ஆடிக்காட்டு என்போம், ஆடுவர், வெள்ளையர் மனம் மகிழ! ஆடை ஏன்? என்பர், களைந்தெறிவர் எமது பெண்டிர் — இல்லையேல் கசையடி!!

அடிமைகளே! சொல்லொணாக் கொடுமைகளைத் தாங்கித் தவித்தோம்! கண்ணீர்வடித்தோம்! பிறகோ? கண்கள் வற்றிவிட்டன! உடலெங்கும் வடுக்கள்—வடுக்கள் உலர்ந்தன—உள்ளம் உலர்ந்துவிட்டது—அச்சமேகூட அழிந்துவிட்டது! சாவுக்கஞ்சா நிலை பெற்றோம், வாழ்வுக்கும் சாவுக்கும் வேறுபாடு காண முடியாத நிலையில், தள்ளப்பட்டதால். விம்முவதை விட்டொழித்தோம், விழிகளிலே நெருப்புக் கிளம்பிடலாயிற்று! விடுதலை ஆர்வம் எனும் தீ, நெஞ்சில் புகுந்தது, கண் வழி வெளிவரலாயிற்று. பார்வையிலே ஒரு கடுமை தெரிகிறது! நடையிலே ஓர் ஆணவம் காணப்படுகிறது! பயலை, அடித்தால் அழமாட்டேனென்கிறான்! அதட்டினால், அச்சப்படமாட்டேனென்கிறான்! என்ன, இதன் பொருள்? என்று ஆதிக்கக்காரர்கள் திகைத்தனர்.

தளையை நொறுக்கிடத் துணியாதிருப்போரே! அவர்தம் திகைப்புக் கண்டோம், இடி இடி எனச் சிரித்தோம்! அடிமை சிரித்தால், பொருள் என்ன தெரியுமா!! கொடுமையை அலட்சியமாகத் தாங்கிக்கொண்டு, அடிமை, ஆதிக்கக்காரன் காது செவிடுபடச் சிரித்தால், பொருள் என்ன தெரியுமா? அடிமை, அடிமை அல்ல என்பது பொருள்! அவனை அடக்கிவைத்திடும் ஆற்றலை, ஆதிக்கக்காரன் இழந்துவிட்டான் என்று பொருள்!

எனவே, விடுதலை பெற்ற எமக்கு வாழ்த்தளித்து மகிழ்வோரே! எங்ஙனம் பெற்றோம் விடுதலை என்று அறிய விரும்பிடின், கூறுவோம் கேண்மின், கொடுமைகளைத் தாங்கிக்கொண்டோம், குமுறிக்கிடப்பதை விட்டொழித்தோம், சிரித்தோம், ஆதிக்கக்காரன் எமைத் தாக்கியதால் இரத்தம் சொட்டக்கண்டு! விடுதலைபெற, ஒரே ஒரு வழிதான் உண்டு! வீரத் தியாகம். அதற்கு, நீவிர் தயாராகிவிட்டீர்களாயின், தளைகள் அறுபடும், தருக்கரின் அரசு அழிந்துபடும், தன்னரசு பெறுவீர்.

பல்கலைக் கழகங்களிலே உள்ளோர், இது குறித்து எண்ணற்ற ஏடுகளை வைத்துக்கொண்டுள்ளனராம். இனித்தான், நாங்கள் அவைகளைப், படிக்கக்கூட வாய்ப்புக் கிடைக்கும். எமக்குப் பாடம் புகட்டப் பல்கலைக் கழகம் இல்லை. மகனை இழந்த தாயின் கண்ணீர், எமக்குப் பாடம் புகட்டிற்று! தள்ளாடி நடக்கவும் வலிவற்ற கிழவனைப், பிடித்திழுத்துச் சென்றனர் சிறையில் தள்ள, அவன் பார்வையிலே, காணப்பட்ட திகில், திகைப்பு, எமக்குப் பாடம் புகட்டிற்று! எரிந்த குடிசைகள், இடிந்த வீடுகள், இழுத்துச் செல்லப்பட்ட ஆடு மாடுகள், உடைத்தெறியப்பட்ட தட்டு முட்டுச் சாமான்கள்—இவையே எமக்குக் கிடைத்த பேராசிரியர்கள்! கை இழந்தோர், கால் இழந்தோர், எமக்குத் தன்மானம் இழந்திடாதிருக்கும், வழி காட்டினர். கண் இழந்தோன், எமக்கு விடுதலைப் பாதையைத் தெரிந்திடச் செய்தான்.

மகளே! மகளே! ஏன் இப்படி வெறிக்க வெறிக்கப் பார்க்கிறாய்? என்று கேட்டிடும் தந்தையின் முகத்தைக் காணவும் முடியாமல், தலையைக் கவிழ்த்துக்கொண்ட, தையலின் கன்னத்தில் புரண்டோடிய கண்ணீர் கண்டோம், விடுதலைப் போருக்கான வீரம் பெற்றோம்!!

அடிமைத்தனம், துவக்கத்திலே, உணர்ச்சியற்ற நிலையை உண்டாக்கி வைக்கும்.

அல்லற்படும்போது, அழத்தோன்றும்.

அழமட்டும் தெரியும்போது, நெஞ்சிலே பீதி குடிபுகும்.

கொடுமை வளர வளரப் பீதி அழிந்துபடும், கண்ணீர் வறண்டுவிடும், நெஞ்சிலே நெருப்பு மூண்டுவிடும்!

அந்தக் கட்டம் தோன்றிவிட்டால், ஆதிக்கக்காரன், திகைப்படைகிறான், கடைசி முயற்சி செய்து பார்க்கிறான்!

அவன் கடைசி முயற்சியில் ஈடுபடும்போது, கொடுமை பல செய்து செய்து, அவன் கரங்கள் வலு

விழுந்து கிடக்கின்றன; அடிமைப்பட்டுக் கிடப்பவனோ, கொடுமை பலவற்றைத் தாங்கித் தாங்கி, உரம் ஏறி நிற்கிறான்!

கடைசி முயற்சி வலுவற்றுப் போகிறது!

அடிமை சிரிக்கிறான்! ஆதிக்கக்காரன், திணறுகிறான்! விடுதலை வெற்றி பெறுகிறது! இதுதான் நாங்கள் பெற்ற பாடம்! விடுதலைபெற விழைவோருக்கு, இஃதன்றி வேறோர் வழிகாட்ட, யாமறியோம்—என்றன்றோ, தம்பி! இதுபோது, விடுதலைபெற்று வீரக்கோட்டம் சென்று இடம்பெறும், நாடுகள் நமக்குக் கூறிடும்.

தம்பி! விடுதலைபெற்ற நாடுகள், பேசிடக் கேட்டால் வீரம் கொப்பளிக்கத்தான் செய்யும், என்கிறாய்—உன் புன்னகை அதனைத்தான் செப்புகிறது. ஆயின், மற்றொன்றைக் கவனித்தனையோ? வீரம் கொப்பளிக்கச் செய்யும் உரையாற்றிடத்தக்க நிலைபெற்ற இந்த நாடுகள், இதோ **அகம்** காணீர், **புறம்** பாரீர்! **தொல்காப்பியம்** காண்மின்! **திருக்குறளைப்** பெறுமின்! என்று கூறிட இயலுமோ, எனின், இல்லை என்றுதான் கூற வேண்டும்.

எனினும், நமது தாயகம், வீரக் கோட்டமாகத் திகழ்ந்தது! இன்று? எண்ணிடவே, வெட்கமாக வன்றோ இருக்கிறது!!

எத்துணை எத்துணை வீரக்காதைகள், உள்ளன நந்தமிழகத்தின் தனிச்சிறப்பினை விளக்கிட!

எத்தனை எத்தனை மாற்றார்களை, மண்டியிடச் செய்தனர், நம் முன்னோர்!!

எங்கெங்கு படை எடுத்துச்சென்றனர், பகை முடித்து வென்றனர்!

இன்றும், அந்த வீரக்காப்பியங்களைப் படிக்கப் படிக்க, இனித்திடக் காண்கிறோம்! பொருள் விளங்கிட விளங்கிட, பொறி பறக்கும் கண்ணினராகி நிற்கிறோம்!

தம்பி! ஓசை கேட்டாலே, விசை ஒடிந்த தேகத்திலும் வீரம்வந்து சேரும்! கூறட்டுமா......

விடவிகள் மொடுமொடு விசைபட
முறிபட எறிபட நெறிபடவே!
அடவிகள் பொடிபட, அருவிகள்
அனல்பட, அருவரை துகள்படவே

ஓசை கேட்கும்போதே, பெரும்படையொன்று எதிர்ப்பட்டதனைத்தையும் அழித்தொழித்தபடி, பாய்ந்து செல்வது, தெரிகிறதல்லவா?

மொடு மொடுவென்று, மரங்கள் முறிந்து விழுகின்றன, படைகள் பாய்ந்து வருவதால், அடவிகள் பொடிபடுகின்றன; மலைகள் தூளாகின்றன, அருவிகள் நெருப்பாகின்றன!

இது தம்பி! கலிங்கப் படை! தமிழ்மறவரின் படையினைத் தடுத்து நிறுத்தப் பாய்ந்து வருகிறது. ஆனால் தமிழரின் பெரும்படையோ, தமிழகத்தைக் கடந்து கலிங்கம் செல்கிறது. படையுடன் செல்வோமோ—பாடல் படித்தேனும்!

பாலாறு, குசைத்தலை, பொன் முகரிப்
பழஆறு, படர்ந்து எழுகொல்லி எனும்
நாலாறும் அகன்று ஒரு பெண்ணை எனும்
நதி ஆறுகடந்து, நடந்து, உடனே.
வயலாறு புகுந்து, மணிப்புனல் வாய்
மண்ணாறு, வளம் கெழுகுன்றி எனும்
பெயலாறு, பரந்து நிறைந்து வரும்
பேர் ஆறும் இழிந்து, அது பிற்படவே
கோதாவரி நதி, மேலாறொடு குளிர்
பம்பா நதியொடு சந்தப் பேர்
ஓதாவரு நதி ஒரு கோதுமையுடன்
ஒலி நீர் மலிதுறை பிற காக.

இப்படி, தம்பி! தமிழர் பெரும்படை, ஆறு பல கடந்து, அடவி பல நடந்து, கலிங்கப் படையைத் தாக்குகிறது. சோளத்தட்டுகள் போன்றாருடன் அல்ல; போர்! மாற்றார், வீரமே! புலியுடன் புலி போரிடுவது போல! மலையுடன் மலை மோதுதல் போல! அந்தப் போரிலே,

குருதியின் நதிவெளி பரக்கவே
குடை இனம் நுரை என மிதக்கவே
கரி துணிபடும் உடல் அடுக்கியே
கரை என இருபுடை கிடக்கவே

இரத்த வெள்ளம்—ஆறு போல! வீழ்ந்த வெண் குடைகள் மிதக்கின்றன, நுரைபோல!! ஆறு கரை புரண்டோடாது தடுத்தது என்னையோவெனின், வெட்டுண்ட யானைகளின் உடலங்கள் கரைபோல அமைந்துவிட்டன—அதனால்!!

இத்தகைய பெரும்போரில், தமிழர் வெற்றியினைப் பெற்றனர் — கலிங்கத்துப் பரணி, அந்தச் சிறப்பினைச் செப்புகிறது.

அந்த வீரத் தமிழ்மக்கள்தாம், நாம்! ஆம்! இன்று வடபுலத்துப் பேரரசுக்கு உட்பட்டுக்கிடக்கும் அடிமைக்காடு!

கொற்றம் இழந்தோம், எனினும், மொழி வளத்தை இன்னும் இழக்காதிருப்பதால், அந்த நாளில் நம்மனோர் வாழ்ந்தது எத்துணைச் சிறப்புடன், என்பதனை, ஓரோர் வேளை அறிந்திட வேண்டும்; வாய்ப்புக் கிடைக்கிறது.

அந்த வாய்ப்பினைத் தக்க முறையில் பயன்படுத்தித் தன்மான உணர்ச்சி பெற்றுத், தனி அரசு கேட்டுப் பெறும் திறம்பெற்று விடுவோமே, என்பதனால்தான், தமிழ்மொழி தனித்தியங்கும் நிலையினைக் கூடக் குழிபறித்துப் புதைத்திடத் திட்டமிட்டுப் பணிபுரிகின்றனர், மாற்றார்; அவர் தரும் சுவைமிகு இண்டி உண்டு கிடக்கும் திம்மப்பரோ, மொழியிலே என்ன இருக்கிறது, 'திரு' என்று கூறிடுவதால் என்ன

உயர்வு, ஸ்ரீ என்றுரைத்தால் என்ன இழுக்கு என்று கூறுகின்றனர்.

மலாய்நாடு, இதுபோன்ற உணர்ச்சியற்ற தன்மையில் இல்லை. ஞோஞா என்று வானொலி பேசுகிறது.

மலாய் மொழியின் தனித்தன்மையைக் காப்பாற்றித் தீரவேண்டும் என்று துங்கு ரஹிமான் உறுதிகாட்டுகிறார். இங்கோ, மொழியில் என்ன இருக்கிறது என்று பேசிக், குழைகிறார்கள், பதவிபெற்றுப் பசி தீர்த்துக்கொள்ளும் போக்கினர்.

ஆனால், அத்தகைய போக்கினரின் தொகையும் மிகக்குறைவு; அவர்பால் மக்கள் கொண்டுள்ள வெறுப்போ, மிக அதிகம்.

இன்று, தமிழ்மொழியின் தூய்மை காப்பாற்றப் படவேண்டும் என்பதிலே நாட்டம் காட்டாத நல்லிளைஞன் இல்லை என்னலாம்.

மொழி, இனத்தின் பண்பையும், நாட்டு வரலாற்றினையும் எடுத்துக்காட்டி, வீரம் ஊட்டிடவல்ல தாய் என்பதை, தன்னை மறவாதார் அனைவருமே, அறிந்துள்ளனர்.

தனி நாடு, தனி அரசு என்று குறிக்கோள் கொள்ளாதவர்களும்கூட, தன்மொழி தாய்மொழி, என்ற உணர்ச்சியை மதித்திடக் காண்கிறோம்.

மொழிவளமேகூடப் பெற்றிராத நாடுகள் பல, பேரரசுகளின் பிடியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு தனி அரசுகளாகித், தரணிக்கோர் அணி என விளங்கும் ஐக்கிய நாடுகள் மன்றத்திலே அமர்ந்து, அவனிக்கோர் புதிய பாடம் அளித்திடக் காண்கிறோம்,

இந்த நிலையில், தம்பி! நாம் நமது மொழி, இனம், நாடு, அரசு, என்று பேசுவதும், உரிமை கொண்டாடுவதும், அந்த உரிமையினைப் பெறத் திரண்டெழுவதும், தவறுமோ? அங்ஙனம், கூறிடும் குறைமதியாளர்கட்கு, மலாய் வானொலி ஒலிபரப்பும் 'ஞோஞா' எனும் சொல்லேனும், நல்லறிவு கொளுத்தட்டும்.

அண்ணன்,

அண்ணாதுரை

# "அடுத்த வாரம்"!

—[தி. செயராமன்]—

இருள்! எங்கும் இருள்! வெள்ளியைப் பழிக்கும் ஒளிக்கிரணங்கள் சிந்தும் நிலவுப் பெண்ணாள்—நிலமென்னும் காதலனை அணைத்திட இன்று வரமாட்டாள்! திங்களுக்கொருமுறை அவனை அவள் தீண்டமாட்டாள்! கதவிடுக்கில் முகம் காட்டுவதுபோல் தேய்ந்து வந்த நிலவும் இன்று தனது முக அழகு முழுமையையும் மறைத்து விட்டாள்! அவளில்லாததால் இருள் 'அமாவாசை' என்ற பெயரில் அலங்கோல நடனமாடுகிறான்! அவன் ஆட்டத்தை வேண்டாத மக்களும் அமைதியோடு கண்ணுறங்குகின்றனர்!

ஆனால், அவனுக்கும் சிலர் நண்பர்களாக உண்டல்லவா? அவனுக்கேற்ற நண்பர்கள்-ஆமாம், சுவர்க்கோழியின் "கிரீச்...கிரீச்', ஒலியும், விட்டுவிட்டு ஒலிக்கும் ஆந்தையின் அலறலும்—ஊளையிடும் நரியின் சத்தமும்-அவ்வொலிகேட்டுக் குரைக்கின்ற குக்கலின் குரலும் இருளின் ஆட்டத்திற்குப் பக்க மேளம் வாசிக்கின்றன. பகலெல்லாம் ஓடி—ஆடி ஓய்வில்லாது ஓங்காரக் கூச்சலிட்ட உலகம்-அடங்கி—அமைதியோடு—போருக்குப்பின் இருக்கும் களம்போல—புயல் ஓய்ந்த பெருவெளியென அமைதி காத்துக் கிடக்கின்றது.

அந்தக் குடிசையில் மட்டும் ஒரு உள்ளம் அமைதியோடு எதையோ எழுதிக்கொண்டிருக்கிறது. குடிசை ஓலையாலானது. கதவும் ஓலைதான்—தாளிடாது கிடக்கிறது. என்றோ செய்த மேசை! அதனைக் காணும் போதே அதன் கிழட்டுத் தன்மை தெரிகிறது. அதன் மீது ஒரு மெழுகுவத்தி! காற்றுத் தாராளமாக உள்ளே நுழைவதால் அதன் அனல் காற்றால் தாலாட்டப்படுகிறது. எதையும் பொருட்படுத்தாத அந்த உருவம் எதையோ எழுதியவண்ணமிருக்கிறது.

முகமெல்லாம் தாடி—கண்களில் ஒளிக்குறைவு—நெற்றியிலே சுருக்கம்-தலையிலே முன்புறம் வழுக்கை—பின்புறம் நீண்டமயிர் — எதற்குமே கலங்காத உள்ளம் — காற்றுக்கோ — மழைக்கோ, கவலைப்படாத மேனி! அந்த மேசைமீது எழுதிக் குவித்த காகிதங்கள்—காற்றிலே பறக்கின்றன! எதையும் கவனிக்கவேயில்லை—காகித அரங்கில் எழுதுகோல் மங்கையை நாட்டியமாடவிட்டிருந்தது.

கதவு திறக்கப்பட்டது. "காப்பி போட்டுத் தரட்டுமா ஐயா!"

"வா, மாணிக்கம்! இன்னும் கொஞ்சம் இருக்கிறது, எழுதி முடித்துவிடுகிறேன். இருவருமே அருந்துவோம் காப்பிபோட்டுவை. மணி என்ன?"

"ஒன்றரை ஐயா! நான் காப்பி போட்டு வைத்துவிட்டு, வீட்டில் கூறிவிட்டு வந்துவிடுகிறேன். இன்றிரவு இங்கேயே தங்கிவிடுகிறேன். நிறையப் பேசவேண்டியிருக்கிறது."

"ஊம்," என்று சொல்லிவிட்டு மீண்டும் எழுத ஆரம்பித்தார் அவர். எழுத்தாளனின் பெயர் இன்பன். சிறுவயதுமுதலே எழுத்தார்வம் மிக்கவர். அவர் வடிக்கின்ற சிறுகதைகள் மக்கள் இதயங்களில் சித்திரம்போல் பதியக்கூடியவை! இவற்றினை வேறு யாரும் அறியார், மாணிக்கத்தைத் தவிர! மாணிக்கம் பக்கத்து வீட்டிலுள்ள விவசாயி வீரப்பனின் மகன்!பள்ளி

மாணவன்! கதை கட்டுரைகளில் ஆர்வம் படைத்தவன்! எனவே, இருவருக்கும் உறவு வளர்ந்தது! இன்பன் எழுத்தோவியங்கள் அவன் இதயத்தை ஈர்க்கும். ஆகவே அவன் அவரோடு பழகுவதைப் பெருமையாகக் கொண்டான். அவருக்குப் பணிபுரிவதில் மகிழ்ச்சி கண்டான்.

மாணிக்கம் கதவு திறப்பதற்கும் இன்பன் பெருமூச்சோடு தலைநிமிர்வதற்கும் சரியாக இருந்தது. "என்ன ஐயா — பெருமூச்சு! இரவெல்லாம் கண் விழித்து வடிக்கிறோம், இதழ்கள் இருட்டடைப்புச் செய்கின்றனவே என்ற கவலையா?"

"அதுகூடக் கவலையல்ல மாணிக்கம்—எனது எழுத்தோவியங்கள், ஒரு சிறு மாறுதலோடு — பெயர் மாற்றி, தான் எழுதியதாக வெளியிடுகிறார்களே சிலர் — அதனை நினைக்கும்போது "யாரோ ஈன்றெடுத்த குழந்தையை, பிள்ளை பெறாத மலடி தன்னுடையது என்று கொஞ்சி மகிழ்பவளை" என்னவென்று உலகம் கேலி பேசுமோ, அதுபோல என்னுள்ளமும் எண்ணுகிறது—பெருமூச்சாகி இதயச் சூட்டை வெளித் தள்ளுகிறது.

"வேறு பத்திரிக்கைகளில் மறுப்பு விடுவதுதானே?"

"நான் என்ன அறிமுகமான பெரிய எழுத்தாளனா? மூலையிலேயே கிள்ளி எறிந்துவிட்டனரே? எழுத்தாளன் நான் என்றால் ஏளனம் பேசுவரே! கண்கள் குளமாயின! மாணிக்கம் அழுதேவிட்டான்.

"இன்று வடவர் ஆதிக்கத்தை —கொடுமையை— ஓரவஞ்சனையை —சுரண்டும் முறையை — சலுகை பெறும் வழியை வெளியே சொன்னால் வேலைக்கு எங்கே உலை வந்து விடுமோ — மனைவியும் மக்களும் கண்ணீர்விட நேரிடுமோ என்று அஞ்சித் தங்களுக்குள்ளேயே பேசிப்பேசிக் குமுறும்எரிமலையென வாழும் அரசாங்கப் பணியாளர் போல நாமும் பேசியே வாழ்கிறோம்."

நீண்ட அமைதி! "சரி ஐயா! இம்முறை இந்த எழுத்தோவியத்தை நானே ஒரு இதழுக்கு அனுப்பி வைக்கிறேன். இப்படிக் கொடுங்கள்" என்று வாங்கி ஒரு பக்கத்தினுள் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டான். "எழுத்தாளன் எதற்கும் கலங்காதவனாயிருக்க வேண்டும்" என்று எத்தனை முறை சொல்வீர்கள்—காப்பி அருந்துங்கள்ஐயா—சூடு குறைந்து விட்டது."

இரவெல்லாம் எந்த இதழுக்கு அனுப்பலாம் என்ற ஆராய்ச்சிக்குப் பின் உறக்கமென்னும் எழில் பூங்காவில் உலவச் சென்றான்.

காலை மலர்ந்தது! பறவையினங்கள் பண்ணிசைத்து உறங்கிக் கிடந்த உலகை எழுப்பின. மாணிக்கமும் ஒரு முடிவோடு இன்பனிடம் விடைபெற்று வெளியே நடந்தான். அவன் தேர்ந்தெடுத்த இதழுக்கு "அடுத்த வாரம்" என்ற இன்பனுடையஎழுத்தோவியத்தை அஞ்சல் நிலையத்தில் சேர்த்துவிட்டுப், பள்ளிக்கு மனநிறைவோடு விரைந்தான்.

வாரம் இரண்டு உருண்டன! அவன் அனுப்பிய பத்திரிகையை ஆவலோடு வாங்கிப் பிரிப்பான்... ஏமாற்றம். "அடுத்த வாரம்" காண்போம். நம்மைப்போல் எத்தனை ஆயிரம் பேர் எழுதுவார்களோ! ஆறுதல் கூறிக்கொள்வான். ஆனால், இன்பன் மட்டும் என்றும்போல் எழுதியவண்ணமே இருந்தான்;

மாணிக்கத்தின் மாமாவின் மகள் மல்லிகாவுக்குத் திருமணம் என்பதால் சென்னை செல்லும் வாய்ப்புக் கிடைத்தது அவனுக்கு. சென்னை செல்வதினாலும் பெருமகிழ்ச்சி. இன்பனுடைய எழுத்தோவியத்தை அனுப்பி வைத்தோமே, அந்தப் பத்திரிக்கை அலுவலகத்தைக் காணப்போகிறோமே என்பதுதான்.

சென்னை வீதிகளிலே வலம் வந்த மாணிக்கம் அவன் அனுப்பி வைத்த பத்திரிகை அலுவலகத்தைக் கண்டுவிட்டான், ஆவல் ததும்ப உள்ளே நுழைந்தான். அவரவர் வேலையில் ஈடுபட்டிருந்தனரே தவிர, "ஏன்,?" என்ன வேண்டும்?" என்பார் இல்லை!

வெளியிலிருந்து அஞ்சல் கட்டுகளை எடுத்த வண்ணம் உள்ளே நுழைந்தான் ஒரு பையன். "என்ன வேண்டும்?" என்ற அதிகாரத் தோரணையோடு. "ஒரு கதை அனுப்பிவைத்தோம்,....அது...."

"அதெல்லாம் வரும்......அடுத்த வாரம்," 'விர்'ரென்று நுழைந்து விட்டான் உள்ளே!

மனச்சோர்வோடு வெளி வந்தான் மாணிக்கம்.

"ஐயா! ஐயா! அடுத்த வாரம் வெளிவருமாம். அந்தப் பத்திரிகை அலுவலகத்தில் சொன்னார்கள். என்றவாறு இன்பனுக்காக வாங்கிவந்த பொட்டலத்தோடு நுழைந்தான். மேசைமீது தலைவைத்துப்படுத்திருந்த இன்பனைக் கண்டதும் அலறிவிட்டான். இன்பன் மீளாத் துயிலில் ஆழ்ந்து கிடந்தான்.

மாணிக்கம் வாங்கிவந்த பொட்டலம் கீழே சிதறிக் கிடந்தது. சோகம் ததும்ப ஒரு இதழை உற்று நோக்கினான். "அடுத்த வாரம்" என்ற தலைப்புத் தெரிந்தது. அவசர அவசரமாக எடுத்தான். இன்பன் வரைந்த எழுத்தோவியம்தான் அது! அதனை முகத்தில் புதைத்துக்கொண்டு மாணிக்கம் அலறியது எங்கும் எதிரொலித்தது.

★

# திருமணம்

✱

'ஹோம்லண்ட்' துணையாசிரியராகப் பணியாற்றிய எம்.எஸ். வெங்கடாசலம்—ஆர். கௌசல்யாவை 15-9-1960ல் கிரம்பூர் உயர்நிலைப் பள்ளியில் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார். சி. என். ஏ. தலைமை வகித்தார். மணமக்களின் சார்பில் அனைவரையும் வரவேற்று, துறையூர் அழகமுத்து அவர்கள் பேசியபின், மணமக்களை வாழ்த்தி இராம. அரங்கண்ணல், அம்பில் தர்மலிங்கம், ஜி. பராங்குசம், கே. காமாட்சி, சி.வி. இராசகோபால் ஆகியோர் உரையாற்றினர்.

வாழ்த்துச் செய்திகள் கழக முன்னணி வீரர்கள் பலரிடமிருந்தும், மற்றையோரிடமிருந்தும் ஏராளமாக வந்திருந்தன. வாழ்க மணமக்கள்!

# பெயரிலே என்ன இருக்கிறது?

—[முத்து]—

காஞ்சிபுரம் விரைவுப் புகை வண்டி கடற்கரையைவிட்டு மெல்ல நகரத் தொடங்கியது. கதவோரம் நின்றிருந்த நண்பர் பூஞ்சோலை, "வாருங்கள்! வாருங்கள்! ஓடி வாருங்கள்" என்று யாரையோ அழைத்தார். இரைக்க இரைக்க வந்து வண்டிக்குள்ளே விழுந்தார்கள் இராபர்ட் சுந்தரும், அப்துல் சமதும். கீழை அரசர் பெருந்தெரு நண்பர் மோகன வீட்டுத் திருமணத்திற்காக நாங்கள் காஞ்சிபுரம் போய்க்கொண்டிருந்தோம். நீண்டகால இடைவெளிக்குப் பிறகு சந்தித்துக்கொண்ட நாங்கள், எதையெதையோ பேசினோம். பாலாய் பாங்க் பிரச்சினையிலே தொடங்கிய எங்கள் பேச்சு அமெரிக்கா செல்வதாக அறிவித்திருக்கும் இரஷ்யத் தலைவர் குருஷ்சேவின் இராஜதந்திரம் வரை விரிந்து பரந்தது. வண்டி மாம்பலத்தைக் கடந்து சைதாப்பேட்டையை நெருங்கிக் கொண்டிருந்தது. திடீரென்று நண்பர் பூஞ்சோலை ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டார்.

"நான் தாம்பரத்திற்கும் கடற்கரைக்கும் பருவப் பயணச் சீட்டு வைத்துக்கொண்டு நித்தம் போய் வருகிறேன். இடையிலே உள்ள தொடர்வண்டி நிலையங்களின் பெயர்களின் காரணம் அறிய முயற்சிக்கிறேன், முடியவில்லை. நீங்கள் தான் சொல்லுங்களேன் முத்து, சைதாப்பேட்டை என்று பெயர் வரக் காரணம் என்ன?"

இந்தக் கேள்வி என் சிந்தனைக்குத் தூபமிட்டது; எங்கள் உரையாடலில் ஒரு திருப்பத்தை உருவாக்கியது.

"நான் கேட்ட அளவில், படித்த அளவில் தெரிந்தவை சொல்லுகிறேன். சையத் என்ற ஒரு முஸ்லீம் வீரரின் பெயரால் அவ்வூர் வழங்கப்படுவதாகக் கூறுகிறார்கள்" என்று சொல்லிவிட்டு நண்பர் அப்துல் சமதின் முகக் குறிப்பை நோக்கினேன். பூஞ்சோலையைவிட சமதுதான் தமது வியப்பை அதிகமாகத் தெரிவித்துக்கொண்டார்.

"அடடே! அப்படியா? நமக்குத் தெரியவில்லையே இவ்வளவு நாட்கள்! முத்துவை நாம் சந்திக்கும் பொழுதெல்லாம் ஏதாவது புதுச் செய்திகள்—விளக்கங்கள் நமக்குக் கிடைத்துக்கொண்டே இருக்கின்றன."

வண்டியில் பலபேர் எதிரில் என்னை அவர் புகழ்ந்ததுபற்றி வெட்கப்பட்டேன். ஆனாலும் விடாமல் தொடர்ந்து கேட்டேன்.

"அதற்குள்ளே முழுமையும் ஆச்சரியப்பட்டு விடாதீர்கள். இன்னும் நிரம்ப இருக்கின்றன. திருச்சிக்குப் போகிற வழியில் 'லால்குடி' என்றொரு ஊர் இருக்கிறதே. அதற்கு அந்தப் பெயர் எப்படி வந்தது தெரியுமா"

'டால்மியாவைப்போல யாராவது மார்வாரி, குஜராத்தி 'லால்' என்ற பெயரோடு இருந்திருப்பார், அவர் பெயரால் அது வழங்கக் கூடும்"

"அதுதான் இல்லை; அந்த ஊரின் பழந்தமிழ்ப் பெயர் தவத்துறை! அங்கொரு சின்னஞ்சிறு குன்று இருந்தது. அதன்மேல் கோயில் ஒன்று இருந்தது. அதற்கு அழகிய கோபுரமும் இருந்தது. முஸ்லீம் நவாபுகளின் கை பிற்காலத்தில் வலுத்த நாளில் அந்த வழியாக வந்த ஒரு அரபு முஸ்லீம் சிவந்த அழகிய கோபுரத்தைக் கண்டு, 'செம்பதுமை' என்று பொருள்படும்படி பார்சி மொழியில் 'லால்குடி' என்று பெயரிட்டார்!"

"ஏதேது! நீங்கள் கடைசியில் ஊர்களின் தமிழ்ப் பெயர்களை மாற்றுவதுதான் முஸ்லீம்களின் வேலை என்று சொல்லிவிடுவீர்கள் போல இருக்கிறதே! — என்று சமது சொன்னார்.

"இல்லை நண்பரே! பிறமொழிக்காரர்களின் ஆதிக்கம் வலுக்கிற பொழுது, தமிழ் மொழியில் எப்படி எல்லாம் மறைமுகமாகச் சிதைவுகள் ஏற்படுகின்றன என்பதற்காகச் சொன்னேன். காஞ்சிபுரத்தருகே வாலாஜாபாத், காவேரிப்பாக்கத்தருகே வாலாஜாபேட்டை, மதுரையருகே கான்சாபுரம், இராமநாதபுரம்மாவட்டத்தில்கான்சாகிபுபுரம், வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஜாவர் பட்டடை. மூர்தானா பட்டடை, மன்சராபாத், அனவராபாத், முரார்பாத் ஆகியவையெல்லாம் முஸ்லீம் ஆதிக்கத்தின் விளைவான சின்னங்கள்! 'அபாத்' என்றால் பார்ஸியில் நகரம் என்று பொருள்."

இந்த நிலையில் இராபர்ட் சுந்தர் தலையிட்டுச் சொன்னார், "அதோடு இல்லை முத்து! நான் அண்மையில் நாகர் கோயிலை அடுத்த சுசீந்திரம் போயிருந்தேன். அங்குள்ள அற்புதமான உயிர்களை ததும்பும் அழகிய பாவை விளக்குச் சிலைகளின் மூக்கையும், மார்பையும் உடைத்தெறிந்திருக்கிறார்கள். பாவைகளின் கையிலிருந்த விளக்குகளில் செம்பாதிக்குமேல் உடைக்கப்பட்டிருக்கின்றன. அத்தனையும் சென்ற நூற்றாண்டில் முஸ்லிம்கள் செய்த வெறிச் செயல்களாம்; வரலாற்றுக் குறிப்பொன்று படித்தேன்."

"பொதுவாகப் பேசும்பொழுது யாரையும் புண்படுத்தும்படி பேசாதீர்கள். கிறிஸ்தவர்கள் மட்டுமென்ன வாழ்ந்தார்கள்? இன்றைக்கு நாட்டிலே இருக்கின்ற சுவிசேஷபுரம், ஆரோக்கியநகர், சந்தோஷபுரம், பரிசுத்தநகர், சாயர்புரம், காசாமேஜர்புரம், குற்றாலமலையடிவாரத்தில் காசிமேசபுரம் போன்ற ஊர்களின் பெயர்களெல்லாம் மாற்றப்பட, மத அடிப்படை

யில் இறித்தவர் கை வலுத்தது தானே காரணம்?"

இராபர்ட்சுந்தரின் முகம் கொஞ்சம் சிறுத்தது. உடனே நான் சொன்னேன், "உங்களைக் குறை கூறுவதாக எண்ணுகிறீர்கள் சுந்தர்! மொழியளவில், மத அடிப்படையில் நாம் கொஞ்சங் கொஞ்சமாக விட்டுக்கொடுத்ததன் விளைவு, கால அளவில எப்படிப் பேருரு எடுத்திருக்கிறது பார்த்தீர்களா? இல்லாவிட்டால் நெல்லையைச் சேர்ந்த 'புலியூர்க் குறிச்சி'க்கு 'டோனாவூர்' என்று ஒரு போர்த்துகீசியன் பெயர் வைப்பானா? கல்லக்குடி டால்மியாபுரம் ஆகுமா?"

பூஞ்சோலை இப்போழுது சிரித்துக்கொண்டே சொன்னார், "அவர்கள் இருவரையும் ஒருதாக்குத்தாக்கியாயிற்று. இப்பொழுது என்மீது பாய ஆயத்தமாகிறீர்கள் போல இருக்கிறது," என்று.

"இதிலே பாய்வதற்கும் தாக்குவதற்கும் என்ன இருக்கிறது? எனக்கென்ன உங்கள் மீது கோபமா என்ன? நம் தமிழ் நாட்டின் அழகுதமிழ்ப் பெயர்களெல்லாம் எப்படி எப்படிச் சிதைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறியும்போது உண்டாகும் வேதனை என்னை அப்படிப் பேச வைக்கிறது. பாருங்களேன், புளியங்காடு என்ற ஊர்ப்பெயர் எவ்வளவு அழகாக இருக்கிறது. அதனைத் திந்திருணிவனம் என்று ஆக்கியிருக்கிறார்கள்! திந்திருணி என்றால் வடமொழியில் புளியைக் குறிக்கும். அந்தத் திந்திருணிவனந்தான் காலப்போக்கில் மருவி திண்டிவனமாக இன்றைக்குக் காட்சியளிக்கிறது.

"எது? புகைவண்டிச் சந்திப்பாகத் தென்னார்க்காடு மாவட்டத்திலே இருக்கிறதே, அந்தத் திண்டிவனமா?"

"ஆமாம். நீங்கள் ஆர்க்காடு என்று சொல்லவே எனக்கு இன்னொன்று நினைவுக்கு வருகிறது. ஆர் (ஆத்தி) மரங்கள் நிறைந்த காடு ஆர்க்காடு. எவ்வளவு தூய்மையாக இருக்கிறது இது. இதனை ஆறுகாடு என்று ஆக்கி, வடமொழியில் ஷடாரண்யம் (ஆறு-ஷட) என்று சாசனங்களில் எழுதத் தொடங்கித் தலபுராணங்கூட எழுதிவிட்டார்கள் போங்களேன்! ஆனாலும் ஏதோ நல்லகாலம் ஆர்க்காடே இன்றும் வழக்கில் நின்று நிலவுகிறது."

"இது மிகவும் அநியாயம். அக்ரமம்"—அப்துல் சமதும், இராபர்ட் சுந்தரும் ஒருமித்த குரலில் கூறினார்கள்.

"கொஞ்சம் பொறுங்கள், ஒரு பட்டியலை நான் தருகிறேன, பிறகு பேசலாம்" என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்தேன.

| தமிழ் | | வடமொழி |
|---|---|---|
| பழமலை | — | விருத்தாசலம் |
| திருமறைக்காடு | — | வேதாரண்யம் |
| புள்ளிருக்கு வேளூர் | — | வைத்தீஸ்வரன்கோயில் |
| மயிலாடுதுறை | — | மாயவரம் (மயூரபுரம்) |
| திருக்காளத்தி | — | காளஹஸ்தி |
| குடமூக்கு | — | கும்பகோணம் |
| தகடூர் | — | தர்மபுரி |
| வெண்கோடு | — | தவளகிரி |
| திருப்பூவனம் | — | புஷ்பவனேஸ்வரம் |
| ஆரைக்கல் | — | நாமக்கல். |

இவை வழக்கில் இருப்பவை. இவை தவிர, மாற்ற முயற்சித்து முடியாமல்போய் விட்டுவிட்ட ஊர்ப் பெயர்களும் உண்டு. திருவையாற்றைப் பஞ்சநதம் என்றும், திருஇடைமருதூரை மத்தியார்ச்சுனம் என்றும், திருவெண்காட்டைச் சுவேதவனம் என்றும் திரித்து வழங்க வேற்று மொழியினர் செய்த முயற்சிகளைத் தேவாரப் பாடல்களும, வேறு சில, சாசனங்களும் தெளிவாகச் சுட்டுகின்றன. ஆயிரத்தில் ஒன்றாக இவற்றை நான் எடுத்துக்காட்டினேன். தமிழகத்தில் இவைபோல் இன்னும் எவ்வளவோ உண்டு. வடமொழியினர்கைவலுத்தபோது —அதுகூடத் தவறு—நம்மவர்கள் கொஞ்சம் தூங்கிவிட்டபோது நிகழ்ந்த சூழ்ச்சியின் விளைவுகள் இவை — திட்டமிட்டுச் செய்யப்பெற்ற பெயர்மாற்றங்கள் இவை."

பூஞ்சோலை பற்களைக் கடித்தார். "அயோக்கியர்கள், வெறியர்கள்!" என்று தன் ஆத்திரத்தைக் கொட்டிக்கொண்டார். பிறகு கேட்டார்.

"ஆமாம் முத்து! இவையெல்லாம் எப்பொழுது நிகழ்ந்தன?"

"நம்மவர்கள் என்று நாம் போற்றுகிறோமே, அந்தச் சேரனும் சோழனும் பாண்டியனும் ஆண்டு வந்த போதே—கலிங்கம் சென்று, கடாரம் வென்று, இமயத்தை வரம்பெடுத்து, கங்கைக்கரை மன்னவர்கள் தோள் எங்கள் தாளின்கீழ் என்ற அளவுக்கெல்லாம் வெற்றிக் கொடிநாட்டிப் பரணி பாடிய காலம் ஒன்று இருந்ததே, அப்போதே—மெல்ல மெல்ல இங்கு வந்து குடியேறி மறைமுகமாக நம் சமுக அமைப்பின் ஆணிவேரில் கைவைத்து அரிக்கத் தொடங்கியது ஒரு கூட்டம். துணைநின்றது அன்னவரின தாய்மொழியாம் வடமொழி; வழி வகுத்துத் தந்தவர்கள் நம்மவருள்—நம் தமிழருள் சில துரோகிகள்."

"ஆமாம் முத்து! அண்மையிலே ஒருவர் பத்திரிகையொன்றில்கூட எழுதியிருந்தார், படித்தேன், பிற மொழியினர், பிற நாட்டினர், பிற இனத்தவர் தொடர்பு ஏற்பட்ட பொழுது விழிப்பாக இல்லாமையால் 'நாடிழந்து, நலமிழந்து, கோட்டையிழந்து கொடியிழந்து நிற்கிற நாம், நம் மொழியையுமா இழக்கவேண்டும்'? என்று. அது உண்மைதான்." அப்துல் சமது பேசினார் இப்படி.

"ஏன் நாம்தான் கண்கூடாகப் பார்க்கிறோமே" இராபர்ட் சுந்தர் தொடங்கினார், "வேண்டுமென்றே இல்லாவிட்டாலும், மொழியின் ஒலிக்கூறு இடந் தராத காரணத்தால் புதுச்சேரி — பாண்டிச்சேரி, தரங்கம்பாடி—டிராங்குவபார், தூத்துக்குடி—டியூடிகொரின், திருநெல்வேலி-டின்னவெல்லி, திருவனந்தபுரம்-டிரிவேண்ட்ரம், பழவேற்காடு—புலிகட், குற்றாலம்—கோர்ட்டாலம், திருவல்லிக்கேணி — ட்ரிப்ளிகேன், நாகபட்டினம்—நேகபடாம் என்றெல்லாம் சிதைந்து வழங்கவில்லையா? உண்மையிலேயே இடைக்காலத்தில் நாம் கொஞ்சம் எதிர்ப்பைக் காட்டியிருந்தால், இந்தச் சிதைவுகளைத் தடுத்திருக்கலாம். இனியாவது நாம் கொஞ்சம் விழிப்பாக இருக்கவேண்டும்."

உடனே நான் சொன்னேன், "தென்னகத்தின் வருங்கால வரலாற்றில் பொன்னழுத்துக்களால் பொறித்துக் காட்டப்பட இருக்கும் மானஉணர்ச்சி நிறைந்த, வீரச்சுவை செறிந்த போராட்டம் மும்முனைப் போராட்டம். அம் மும்முனையில் ஒரு முனை நல்ல தமிழ்ச்சொல் கல்லக்குடியை டால்மியாபுரம் என்று மாற்றி வைத்த

மறைமுகமான வெறித்தனத்தை—எதேச்சாதிகாரத்தைச் சுட்டிக் காட்டி எதிர்த்தழிப்பது. மாற்றுக் கட்சிகாரர்களும், மதிமிக்க மந்திரிகளும் அப்பொழுது என்ன சொன்ஞர்கள்? 'பெயரிலே என்ன இருக்கிறது? இதற்கு ஒரு போராட்டமா' என்றுதானே கிண்டல் பேசினர்கள். இப்போது இந்தி வந்துகொண்டிருக்கும் வேகத்தைப் பார்க்கிருேமே! இனியுமா நாம் வாளா இருப்பது?''

"வாளா இருப்பதாவது! முதலில் அரசியல் சட்டத்தை ஏற்ற வகையில் திருத்தி அமைத்தாக வேண்டும். அடுத்து நம் நாடு தமிழகம் என்ற பெயரால் சட்டபூர்வமாக அழைக்கப்படவேண்டும். 'இல்லாவிட்டால் வடபுலத்தாரின் மொழி ஆதிக்கத்திலிருந்து நம்மை நாம் மீட்டுக்கொண்டதாகச் சொல்லவே முடியாது.''

"அதையேதான் நானும் சொல்லுகிறேன். இல்லாவிட்டால் மறைமுகமாகவாவது இந்தி இங்கு வரத்தான் செய்யும்; மூல்தான்புரங்கள், பஜாஜ் நகர்கள், கோயங்கா பேட்டைகள் தோன்றிக்கொண்டுதான் இருக்கும். எல்லாத் தமிழர்களுமே கட்சி வேறுபாடு இல்லாமல் இதை எதிர்த்தாலொழிய நமக்கு விடிவே இல்லை.''

"தமிழறிஞர்கள், வணிகத்துறையினர் போன்ருேர் இதில் பெரிதும் அக்கரை காட்டவேண்டும்.''

"ஓரளவு மறைமுகமாக அவர்கள் செய்துதான் வருகிருர்கள். இவ்வளவு நேரம் நான் ஊர்ப்பெயர்களுக்கு விளக்கங்கள் கூறி வந்தேனே, அவைகூட பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவரின் ஆராய்ச்சிக் கருத்துக்களையும், வேறு சில ஆவணங்களையும் ஆதாரமாகக் கொண்டதுதான். ஆனுல் அவர்கள் நேரில் வந்து தமிழின் ஆக்கத்துக்குப் பணிபுரிய வேண்டும்'' என்றேன் நான்.

இப்படி தத்தித் தத்திச் செல்லும் தமிழனின் வாழ்க்கைநிலையை எண்ணிப் பெருமூச்செறிந்தவாறு வண்டி செங்கற்பட்டு (செங்கழுநீர்ப் பற்று) நிலையத்தில் நுழைந்தது. நண்பர்கள் காவ்வி அருந்த இறங்கிஞர்கள். எங்கள் உரையாடலும் அத்துடன் முடிந்தது.

★

# உண்மையில் வெறுமை!

—[கனகு]—

நான் அமர்ந்திருக்கின்றேனே இந்த உயர்ந்த மாடி, இது ஊருக்கெல்லாம் உயர்ந்த மாடி. இங்கிருந்தபடி இந்த ஊரின் எந்தப் பகுதியையும் காணலாம். எல்லாமே என் பார்வை மட்டத்திற்குக் கீழேதான் கிடக்கின்றன. அதோ, எத்தனை ஆயிரம் குடிசில்கள்! தொழிலகங்கள் எத்தனை, எத்தனை! அலுவல் மனைகள் எத்தனை! என் பார்வையில் அவற்றின் மேல் மட்டங்கள்தாம் பட்டுக்கொண்டிருக்கின்றன. என் உள்ளத்தில் அவற்றின் வெறுமைக் கோலம்தான் தென்படுகின்றது. பார்வை மட்டத்தில் தென்படுவதற்கு வான வெளியில் தன்னிச்சையாகச் சிறகடித்துப் பறந்து செல்லும் ஒரு காக்கை குருவியைக்கூடக் காணமுடியவில்லை. உண்மையா, பொய்யா என்று அறுதியிட முடியாத, இருமையும் இல்லாத வெறுமைதான பார்வையிற்பட்டு உள்ளத்தைத் தாக்குகின்றது. எத்தனை நாட்கள் இந்த மாடிமீது அமர்ந்து, சிந்தனைக் கடலில் ஆழ்ந்து, அமிழ்ந்து கிடக்கிறேன் தெரியுமா? அப்போதெல்லாம் என் கற்பனை ஓட்டம், ஓட்டமாக ஓடிக்கொண்டிருக்கும். நான் பக்கம் பக்கமாக எழுதிக் குவித்துக்கொண்டிருப்பேன். அல்லது என் கண்ணின் கீழ்மட்டத்தில் நிகழ்கின்ற ஆக்கமோ, படைப்போ, இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையோ, அல்லது அவற்றை எல்லாம் அடைபட்டுக் கிடக்குமாறு செய்துவிட்டுப், பார்வையின் நேர் மட்டத்தில் அல்லது மேல் மட்டத்தில் தென்படும் இந்த ஒன்றுமில்லாத வெட்டவெளியாம் வெறுமையோ,—ஆக யாதுமே என் உள்ளத்துள் புகுந்து, இடையீடு காட்டி இன்னற்படுத்தாமல், எல்லாவற்றையும் தாண்டிக்கொண்டு—அவற்றுக்கெல்லாம்—அப்பாலுக்கப்பால் சென்று, என் கற்பனை உலகிலே ஒய்யார நடைபோட்டு 'ஓ'ங்கார முழக்கமிட்டு மெய்யான இன்பம் இது, மெய்யான வாழ்வு இது என்று ஆரவாரமிட்டபடி அங்கு சுற்றித் திரிவேன்.

இன்று என் கற்பனை உலகின் கதவு நன்ருகப் பூட்டப்பட்டுக் கிடக்கின்றது. 'என்ன இது, என்றுமில்லாத புதுமை?' என்று என்னை நானே பலமுறை கேட்டுப் பார்த்துவிட்டேன். இன்னும் கேட்டுப் பார்த்தபடியே இருக்கின்றேன். எனக்குள்ளிருக்கும் அந்த மற்ருென்று வாயடைத்துப் போய்க் கிடக்கின்றதே! ஏன்?

என் பார்வை அதோ கீழ்மட்டத்திற்குச் செல்கிறது. அங்கே வீடுகள், குடிசில்கள், தொழிற்கூடங்கள், கலைக்கோட்டங்கள், அலுவல் மனைகள் ஆகியவற்றின்மேல் மட்டந்தான் — கூரை முகடுதான் — தென்படுகின்றது. நேர் மட்டத்தில் வெறுமை, வெட்டவெளி. மேல்மட்டத்திலே பெரும்பெரும் வெறுமை. பெரும் வெட்டவெளி.

நேற்றுவரை இந்தவெறுமையை—இதன் ஒன்றுமில்லாத் தன்மையை இப்படி உற்று, ஊன்றிப்பார்க்கவில்லையே நான். நேற்றுவரை என் கற்பனை, உலகத்துக் கற்பனைப் பெண்ணுள், கனவுப் பெண்ணுள் என்னோடு கலந்து உறவாடி, இந்த உண்மையின் வெறுமைக்கோலம், —அல்ல வெறுமையின் உண்மைக் கோலம் என் கண்களால் தைக்காமல், என் உள்ளத்தைத் தாக்காமல் மறைத்துக் கொண்டிருந்தாளே! தன் கனவுலகில் என்னை எங்கெங்கோ அழைத்துச் சென்று கொண்டிருந்தாளே! விதவிதமான, சொல்ல முடியாத இன்பங்களை எல்லாம் என்பால் வாரிவாரி வழங்கிக் கொண்டிருந்தாளே! இன்று அவள் எங்கு போனுள்? ஐயகோ, என்ன தொல்லையடா தொல்லை இது! இனி அவளைக் காணவே முடியாதா? ஒருவேளை என்னை ஆட்டிவைத்துத், துடிக்கவிட்டு வேடிக்கை பார்க்கவேண்டுமென்று நினைத்தாளோ! சிறு குழந்தையைப்போல நான் ஒன்றும் தோன்ருமல் அழுதுகொண்டிருப்பதைப் பார்த்து, என்னை எள்ளி இகழ்ந்து கைகொட்டிச் சிரிக்கவேண்டுமென்று நினைத்தாளோ! ஐயோ வெறுமையே, என்னிடமிருந்து நீ விடைபெற்றுக்கொண்டு போக மாட்டாயா? இவ்வேளை உன்னை

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

யன்றி எனக்கு வேறு உதவுவார் இல்லையே, வெறுமையே! நீ தான் ஓடிப்போய் என் கற்பனைப் பெண்ணிடம் செய்தி சொல்லி, இங்கே உடனே வரும்படி செய்யவேண்டும். ஒருவேளை அந்தக்கனவுப் பெண்ணாள் தன்—என்—கற்பனை உலகையே தூக்கி மறைத்துவைத்துக்கொண்டு, இங்கு எங்காவது ஒளிந்து நின்றபடி என்னைப் பார்த்து ஏளனச்சிரிப்புச் சிரித்துக்கொண்டிருக்கின்றாளோ! வேற்று நூலார் சொல்கின்றார்களே, அவளை மாயை என்று! அவளுடைய—அந்த மாயையின்—செயல் எல்லாம் இப்படித்தான் இருக்குமோ — சமயத்தில் கழுத்தறுக்கும் செயலாக! ஆனால், 'இந்தக் கனவுப் பெண்ணாள் மாயைதான்; என்றாலும் முடிந்த முடிவின் உண்மை உருவும் அவளேயாம்' என்று அறிஞர்பெருமக்கள் சொல்கின்றார்களே! அப்படிப்பட்ட அவள் இல்லாமல் எப்படி நான் உய்வேன்? ஐயோ வெறுமையே! உன்னைப்பார்க்க என்னால் முடியவில்லை. கண்கள் கூசுகின்றன. உள்ளம் அலமருகின்றது. போ, போ! என் எதிரில் நில்லாமல் ஓடிவிடு. உடனே செய்தி சொல்லி அனுப்பிவை என் கற்பனைப் பெண்ணை—அவள் உலகோடு இங்கு. அவள் மாயையாயிருந்தாலும் பாதகமில்லை. அவள்தான் எனக்கு வேண்டும்.

அப்பப்பா, அந்தக் கனவுப் பெண்ணாளுக்குத்தான் எத்துணை ஆற்றல்! அவள் என்னோடு இருக்கும் வேளை என்னால் எதைப்பற்றியுமே எண்ணிப்பார்க்க முடியாது போகிறதே! என்னையறியாமலே அவள் இழுக்கின்ற இழுப்புக்கெல்லாம் ஈடுகாட்டித் தொடர்ந்து சென்றுவிடுகின்றேனே! அவளின் இழுப்பாற்றலே ஆற்றல்! அவளே அந்த ஆற்றல். அந்த ஆற்றலே அவள். அவள் இல்லாத வேளையில், 'அவளைப் பற்றிக்கொண்டு, அவளைச் சுற்றிக்கொண்டு எது எதுவோ கிடக்கின்றனவாம்; அவற்றை எல்லாம் ஆராய்ந்து பார்த்துவிடவேண்டும்' என்று எண்ணுகிறேன். ஆனால், அவள் என் முன்னால் வந்துவிட்டாலோ, அவள் போக்குப்படி விட்டுக் கொடுப்பதைத் தவிர, வேறு எதுவுமே என்பால் தோன்றாமற் போய் விடுகின்றதே! அறிஞர் பெருமக்கள் சொல்கின்றார்கள்: அமைதியோடு அமைதியை மோதவிட்டு ஆயிரம், ஆயிரம் விசித்திரங்களை எடுத்து நீட்டி, 'பார் பார், நன்றாகப் பார்!' என்பாளாம் அவள். இருளோடு இருளைக் கலக்கப் போட்டு, எண்ணிறந்த உண்மைகளை எடுத்து, எடுத்து, பிரித்துப் பிரித்து, விளக்கி விளக்கிக் கண் முன்னால் வைப்பாளாம் அவள். இன்னும் என்னவெல்லாமோ செய்வாளாம்; காட்டுவாளாம்; அறிவுறுத்துவாளாம். அவ்வாறு அவள் காட்டுகின்ற ஒவ்வொன்றிலும் வெறுமையில் உண்மை என்ற பொருள் பொதிந்து பொதிந்து கிடக்கின்றதாம். அவற்றை அளந்து, அளந்து ஆரவாரத்தோடு — ஏன், மேட்டிமையோடு கூடத்தான் அந்த அறிஞர் பெருமக்கள் கூறுகின்றார்கள். அவர்கள் சொல்லிலே ஒன்றுகூடப் பொய்மை இல்லை என்பதை எப்படி ஒப்புக்கொள்ளாமல் இருப்பதற்கென்று, அதாவது என் வரையில் நிறைவுபடுத்திக்கொள்ளுமாறு ஏதாவது இடைவெளி விடுகின்றார்களா அவர்கள்? எல்லாவற்றையும் கச்சிதமாக அடைத்தல்லவா காட்டுகின்றார்கள் — மூச்சுக்கூட என்னால் விடமுடியாதபடி. என் செய்வது? பேசாமல் ஒப்புக்கொள்வதைத் தவிர வேறு வழியே இல்லையே!

அத்துணைச் செய்திகளை அந்த அறிஞர் பெருமக்கள் அள்ளி அள்ளிவீசி வெறுமையில் உண்மை இதுதான் என்று பிட்டுப் பிட்டுக் காட்டும் அளவு, அவர்களோடு பழகும் அந்தக் கற்பனைப் பெண்ணாள் என்னோடும்தான் உறவாடுகின்றாள். நானும் தான் பிழைப்பற்றுப் போய் அவளை நாடி நாடி ஓடுகிறேன். அவளுந்தான் என்மீது பற்றும் பாசமும் கொண்டுள்ளவள் போல் என்னைத் தேடிக்கொண்டு வருகிறாள். அவள் என்னைத் தேடிக்கொண்டு வரும்போது எனக்கு எதுவுமே தோன்றுவதில்லை. அவள் இழுத்தபடி எல்லாம் இழுபட்டுக்கொண்டு போகிறேன். அவளை நாடி நான் ஓடும்போது எதை எல்லாமோ எண்ணிக்கொண்டு திட்டமிட்டுக்கொண்டுதான் போகிறேன்; அவளை அணுகுகிறேன். ஆனால் என்னைக்கண்டதும் அவள் சுருட்டிவாரியபடி எழுந்து கொள்கிறாள். அவளுடைய—எழுந்து நிற்கும்—அந்த ஒரு கோலத்திலேயே நான் மயக்கம்போட்டு விழுந்துவிடுகிறேன். எண்ணங்கள் எல்லாம் மாறிவிடுகின்றன. நினைத்திருந்தவை எல்லாம் மறந்துபோகின்றன. மறைந்துவிடுகின்றன. அதுதான் சமயமென்று அவள் எல்லாவற்றையும் மூட்டைகட்டி வைத்துவிடுகிறாள். பிறகு என்னால் அங்கு காண்பதற்கு என்ன இருக்கின்றது? ஒன்றுமே இல்லை — அந்த வெறுமையில் உண்மையாம் வெற்றுத் தன்மையும், வெற்றுப் பொருளும்கூட. அப்புறம் அவள் இழுக்கிறாள். அவள் பின்னால் ஓடுகிறேன். அவ்வளவுதான். கதையை முடித்துக்கொண்டு அவள் ஓடிவிடுகிறாள். நான் விக்கி விறைத்து, திகைத்துப்போய் நிற்கிறேன்.

பிறகுதான் அந்த வெறுமையில் உண்மையைப்பற்றி அவளிடம் கேட்கவில்லையே, ஆராயவில்லையே என்பனவெல்லாம் நினைவுக்கு வருகின்றன.

என்ன செய்வது? அவளைக் காணாமலும் இருக்க முடியவில்லை. காண்பதிலும் பயன் இல்லை— வேண்டியதை வினவவும், ஆராயவும் முடியாமற்போவதால்.

இருக்கட்டும், இருக்கட்டும். எத்துணை நாட்கள் தாம் என்னை ஏமாற்ற முடியும்? இந்தத் தடவை உறுதியோடு, விழிப்போடு இருக்கிறேன். செயல்படுகிறேன். அந்த வெறுமையில் உண்மையைப்பற்றி —அட அதற்குள் மறந்துபோய் விட்டேனா? உண்மையில் வெறுமையா? வெறுமையில்உண்மையா? எதுவோ! பாதகமில்லை! அதைப் பற்றி—நான் விளக்கம் காணாமலா விட்டுவிடப்போகிறேன்!

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.